APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

# BHODANA MANJARY

## The Book of Morals

### PART I

BY

G. George Thangasami,
Member, Karanthai Tamil Sangam, Tanjore.

[ SECOND EDITION ]
(Revised)

Printed at
THE LAWLEY ELECTRIC PRINTING PRESS,
K. M. HALL, TANJORE.
1931.

ed. ] [ PRICE 5 As.

# போதனாமஞ்சரி

நீதிக்கதைகள் அடங்கியது.

முதலாம் பாகம்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து அங்கத்தினர்

G. ஜார்ஜ் தங்கசாமி

இயற்றியது.

(இரண்டாம் பதிப்பு.)

தஞ்சை.

கருணாநிதி வைத்தியசாலை, லாலி எலக்டிரிக் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப் பெற்றது.

*All Rights Reserved*] 1931. விலை அணா. 5

# முன்னுரை.

ஒரு நாட்டின் நன்னிலைக்குச் சாதனமாயுள்ள பொருள்களில் மொழியும் ஒன்றாகும். அம்மொழியின் முன்னேற்றத்திற்கும், மாணவர்களின் மதி:வளர்ச்சிக்கும், நல்லியல்புகளுக்கும் இன்றியமையாததாய் வேண்டப்படுவது உரைநடையே என ஆன்றோர் கூறுவர். ஆங்கில முதலிய அயல்மொழிகள் அகன்று விளங்குதற்கு அவ்வம் மொழிகளில் வேண்டிய உரை நடை நூல்கள் வெளிவந்தமையே காரணமாகும். சிலகாலமாகத் தக்கார் பலர் தளரா முயற்சிகொண்டு நந்தாய்மொழியாகுந் தமிழ்மொழியிலும் உரைநடை நூல்கள் பல வெளியிட்டுவருகின்றார்கள். அந்நெறிபற்றியே எனது நண்பர் திருவாளர் G. **தங்கசாமி** அவர்கள் இக்காலத்திற்கு வேண்டப்படும் நட்பு, நன்றி, சமயம் முதலிய பொருள்களையும், அவைகட்கேற்ற கதைகளையும் ஒருங்கே தொகுத்துப் 'போதனுமஞ்சரி' என்னும் உரைநடை நூலை உதவியுள்ளார்கள். இது இனிமையான எளிய நடையில் அமைந்துள்ளது. கற்போர் உள்ளத்தைக் கவருந்தன்மையது. பிற்காலத்தில் நாட்டைப் பண்படுத்தற்குரிய நல்லோர்கள் தற்கால மாணவர்களே யாதலால், அவர்கள் இளமைப் பருவத்திலேயே தங்கள் மனமெனும் புலத்தில் ஒழுக்க முறைகளைப் பயிர் செய்யவேண்டியவர்களாயுள்ளார்கள். இந்நூலில் கண்ட பல நீதிகளையும், கதைகளையும் மாணவர்கள் ஓதி உணர்வார்களாயின், அவர்கட்குப் பெரிதும் பயனுண்டாகும். ஆதலின் கலாசாலைத் தலைவர்கள் இந்நூலைத் தங்கள் வகுப்புக்களில் துணைப்பாடமாக வைத்து ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

பிஷப் ஹீபர் உயர்தரப் பாடசாலை, திரிசிரபுரம்.
விபவ, தைத் திங்கள் 9உ

எஸ். கே. தேவசிகாமணி,
தலைமை ஆசிரியர்.

O—,3x N31

## Preface to the First Edition.

I was contributing a series of articles, headed "**BODANA MANJARI**," to a Monthly Magazine, The Tamil Church Deepika, Madras. Many of its readers—some of them are Pandits while others are educationists—appreciated the educative value of these contributions in the elementary morals and expressed their desire to compile them in books of small size so as to be useful for students of school-going age. At the advice and encouragement coming from educational quarters, I venture to publish and present them in handy books to the kind commendation of teachers and solicit their kind support by way of introducing the books in their schools. Part I is just ready for sale and other volumes will be published shortly.

I tender my heartfelt thanks to Headmasters and Tamil Pandits for their kind suggestion and I am, in no small measure, indebted to M. R Ry., S. K. DEVASIGAMONY Avl., B. A., L. T., (*Headmaster, Bishop Heber College—High School, Trichinopoly*) who was kind enough to assist me in the compilation work in addition to his valuable "foreword" appended hereto.

AUTHOR.

---

## Preface to the Second Edition.

I wish to express my thanks to the several educational institutions for their appreciation of the moral value of this little Book. I feel also glad that the demand is increasing. Since the first Edition is exhausted, I venture to issue the Second Edition and wish that our youth may be benefited by adoption of morals illustrated here.

AUTHOR.

கடவுள் துணை.

# வையந்தோறுந் தெய்வந் தொழு.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

கடல்சூழ்ந்த இப்பூவுலகின்கண் நமது கண்ணிற்குப் புலப் படும் படைப்புப் பொருள்கள் யாவும் இறைவர் திருவருட் பேற்றினலேயே உண்டானவைகள் என்று உணர்கிறோம். கடவுளின் திருச்செயல் இன்றி யாவும் தாமாக உண்டாக மாட்டா. விதைகளைப் பாறையான இடங்களில் தெளித்தால் முளை காணுமா? நிலத்தைப் பண்படுத்தி, எருப்போட்டுத் தண்ணீர் பாய்ச்சி விதைத்தால்மட்டும் நல்ல பலன்தரும். அவ்வாறகவே சிறியோர்களை நடத்தும் முறைப்படி நடத்தாது போனல் எவ்வாறு சீராய் நடப்பார்கள்? ஆகவே மேற் கூறப்பெற்றவைகட்குக் கடவுளின் கிருபை வேண்டுவது சாலச் சிறந்ததாகும். கடவுளின் அருள் இன்றி ஒன்றும் நடைபெருது.

அன்பே உருவாயமைந்த கடவுள் நாம் கண்டு களிக்கும் அசையும் பொருள்கள், அசையாப்பொருள்கள் அனைத்தையும் படைத்துப் பரிபாலித்துவருகிருர். சிருஷ்டிப் பொருள்களில் எது அவர் கட்டளையை மறுத்து நடக்கிறது? ஒன்று மில்லையே. சந்திரனும் சூரியனும் அவர் ஆணைப்படி அல்லும் பகலும் தத்தம் வேலைகளை முறைதவருது செய்துவருகின்றன. கடல் தன் எல்லையைக் கடவாது குறித்த இடத்திலிருந்து கொண்டே தனது ஆட்டபாட்டத்தைக் காண்பிக்கிறது. இவ் வாறக இவைகள் அன்று பெற்ற ஆணைப்படி தத்தம் வேலை களைச் செய்துவருகிறபோது, உயர்நிலைபெற்ற மானிடர்

எவ்வாறு இருத்தல் வேண்டும்? '**மனுவைப்படைத்தான் தனைவணங்க**' என்றவண்ணம் அன்னவரைத் துதியாது இருத்தல் நலமாகுமோ? ஆகையால் நாம் அந்தக் கடவுளை இமைப் பொழுதும் மறவாது அவருடைய திருவடித் தாமரை களைத் தழுவி இன்புறவேண்டுமன்றோ?

உலகின்கண் காணப்பெறும் பொருள்கள் அனைத்திற்கும் காரணப் பெருமான் அவரே. '**அவனன்றி ஓரணுவும் அசையாது.**' அவர் அண்டங்களை அணுவாகவும், அணுக்களை அண்டமாகவும் மாற்றவல்ல ஆற்றலுடையவர். அவருக்குத் தெரியாத காரியமும் மறைவான பொருளுமில்லை. அந்தப் பரஞ்சோதி பாபாத்துமாக்களைப் புண்ணிய புருடர்களாகவும், வறிஞரைச் செல்வர்களாகவும் செய்ய வல்லவர். இன்னும், பொல்லாதவர்களையும், பெருமைக்காரர்களையும், மூர்க்கர்களை யும் அழிக்கவும், தரையோடு தரையாய் நசுக்கவும் அவரால் ஆகும். அவ்விதத் திருச்செயல் அன்னரிடத்தில் இல்லை யென்று மறுத்துக் கூறுபவர் யாவர்? இது நிற்க, அன்று நாம் அன்னையிடம் உருவாகி உலகிற் பிறந்தநாள் முதலாய் வறுமைநோயின்றி நம்மைக் காப்பாற்றி வரும் அரிய செயல் யாரிடத்திலுள்ளது? இது நம் அன்னை தந்தையர்களின் செயலோ? அன்றே.

"கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கும் மெய்யன்" யார்?

அந்தப் பரம்பொருளே நம் அனைவோர்க்கும் ஆதி காரணர். உலகத்தை நீதியோடு ஆளும் ஒப்பற்ற வேந்தர். மன்னுயிரைத் தம்முயிர் போலக்கருதும் மாண்புடைய மன்னர். அவருடைய கிருபையின்றி நாம் இப்புவியின் கண் ஓர் கணமும் உயிர் பெற்றிருத்தல் இயலாது. ஆகை யால் இம்மண்ணுலகில் நாம் உயிர் பெற்றிருக்கவும், நோயற்ற

வாழ்வுபெறவும், இம்மை மறுமைப் பயன்களைப் பெறவும் அன்னவரைச் சார்புகொள்வோமாக.

இவைகளை நன்கு கவனித்து வாழ்க்கை நடத்தும் ஒருவனுடைய மாண்பின் சிறப்பை எங்ஙனம் எடுத்துரைப்பது?

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்றபடி அவன் தான் நாடிச்செல்லவேண்டிய அந்த மேலான காரியத்தின்பொருட்டு இடையூறுகள் வரினும் அவற்றின் பொருட்டு மனந்தளர்ந்துபோகான், பொருட்படுத்தவுமாட்டான். அவன் வேண்டி நிற்பது கடவுளுடைய தரிசனை, இம்மை மறுமைப் பயன்கள், உத்தமர்களின் உறவு ஆகிய இவைகள் போன்றவைகளே. இவ்வாறாக எவனொருவன் ஒரே நிலையில் நின்று தான்கொண்ட கருமத்தை முடிக்க விருப்புக்கொள்வனோ அவனுக்கு இறைவர் திருக்கண் நோக்கி, அருள்மாரி பெய்து அவனை ஈடேற்றுவிப்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கடவுளை மனக்கண்ணினால் நோக்கி, நெறிதவறாது வாழ்க்கை செய்யும் ஒருவனுடைய வாழ்வின் பாக்கியத்தைக் கீழ்க்கண்ட ஓர் உண்மைக் கதையினால் உணர்ந்து கொள்வோமாக:—அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எபிரேயர் என்னப்பட்ட யூதர் மரபிற்றோன்றிய சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுடன் பிறந்த சகோதரர்கள் ஏழுபேர். அவர்கள் யாவரும் சிவந்த மேனியுடையவர்களாய் எல்லா அங்க இலட்சணங்களும் பொருந்தியவர்களாகக் காணப்பெற்றார்கள். அவர்களுடைய அகன்ற நெற்றிகளையும், அடர்ந்த புருவங்களையும், நீண்ட கைகால்களையும், கறுத்து

அடர்ந்த நீண்ட முடிகளையும், பருத்த புயங்களையும், பறிக்கும் கண்களையும், கோவைக்கனி போன்ற அதரங்களையும் நோக்கும் ஆடவர்களே அதிசயிப்பர். இந்திரலோகத்தரசர்களோ வெனச் சந்தேகிப்பர். ஆனாலோ அவர்களுக்குத் தெய்வ பயம் சிறிதும் இல்லை. தாங்கள் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழ்நாட்களைக் கழித்து வந்தார்கள்.

"என்னதான் கற்றாலென், எப்பொருளும் பெற்றாலென்
உன்னை அறியாதார் உய்வரோ பூரணமே"

மூத்தோர்களின் இலட்சணம் இவ்வாறிருந்தது. ஆனால் எல்லோருக்கும் கடைசியிற் பிறந்த இளைஞனான **தாவீது** என்பவனோ அப்படிப்பட்டவனன்று. அவன் தன்னுடைய அண்ணன்மார்களைப் போன்றவாறே அத்தகைய அழகு வாய்ந்தவனாக விருப்பினும் தற்பெருமை கொள்ளாதிருந்தான். கடவுளையே தனக்குத் தஞ்சமாகக் கொண்டிருந்தான். காலை மாலைகளிலும் இன்னும் தனக்குக் கிடைக்கும் நேரங்களிலும் அவரை மறவாது தோத்திரம் செய்வான். '**அடக்கம் அமரருள் உய்க்கும்**' என்பதற்கு இணங்க அவனிடத்தில், அடக்கம் என்னும் சிறந்த குணம் தென்பட்டது. '**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**' என்னும் சுருதியை யுணர்ந்து தாய் தந்தையரைத் தெய்வமாகக் கருதி அவர்கட்கு அடங்கி நடப்பான். அவர்கள் காலாலிடும் கருமத்தைச் சிரசாலேற்றுத் தொண்டு புரிவான். ஆசான், குரு முதலிய பெரியோர் களிடத்தில் மிகவும் மரியாதையாக நடந்துகொள்வான். ஏழை களையும் அங்கக் குறைவுள்ளவர்களையும் காணில் மனம் வருந்துவான். அவர்களுக்கு எள்ளளவேனும் அல்லல் விளைவிக்க மனங்கொள்ளான். இவ்வண்ணமாக '**நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக**' நற்காரியங்களைக் குறைவு படாது முடிப்பான்.

'மனிதன் முகத்தைப் பார்ப்பான், கடவுளோ உள்ளத்தை நன்கு அறிவார்' என்ற வேத உரைப்படி சிறுவனுடைய களங்கமற்ற மனத்தை நன்கு அறிந்த இறைவர் அன்னவனைக் கண்ணோக்கினார். கிருபாநிதியாகிய கடவுள் எந்நேரமும் அவனுடன் இருந்து கிருபை வரத்தை அவனுக்குத் தந்தருளினார். கடவுளுடைய அருள் ஒருவனுக்கு இருக்குமேயாகில் அவனுக்கு இவ்வுலகில் ஏதேனும் அச்சங்கள் ஏற்படுமோ? பகைஞர்களுடைய வாள் அவனைப் பங்கம் செய்யுமோ? கரடி, புலி, சிங்கம் முதலிய மாவினங்கள் துன்புறுத்துமோ? சூழ்ந்து எரியும் தீ அவனைப் பட்சிக்குமோ? அலைகடல் அவனைப் பிடித்து இழுத்து ஆழ்கடலிற் புகுத்துமோ? மாருதம் மோதி யடித்து மடக்குமோ? இறைவர் அருள் பெற்றார்க்கு மேற் கூறியவைகள் ஒரு துன்பும் செய்யா. இவ்வண்ணமாகத் தாவீது என்பவன் சிறுவனாக விருப்பினும் கடவுள் அருளை நிறையப் பெற்றிருந்தான். ஆண்டவர் திருவருளை அவன் அடைந்திருந்ததினால் அவனே மிகுந்த பாக்கியசாலியாகக் காணப்பெற்றான். அதனால் விரோதிகளும் தத்தம். பலத்தை அவனிடங்காட்ட இயலாதுபோயினர். இதனை விளக்க அவன் வாழ்நாட்களில் நடந்த இரண்டு சம்பவங்களை நன்கு கவனிப்போம். பூர்வகாலத்தில் **கானான்** என்னும் தேசத்தில் வாழ்ந்துவந்தவர்கள் மிகுதியாக ஆடுகளை வைத்து வளர்த்துவந்தார்கள். நமது நாடுகளில் ஆயர்கள் ஆடு மாடுகளை மந்தை மந்தையாக வைத்து வளர்ப்பதுபோன்று அந்நாடுகளில் வசித்து வந்த யூதர்களும் ஆடுகளை மந்தை மந்தையாக வைத்து வளர்த்து வந்தார்கள். இப்போதும் அதே தொழிலை எண்ணிறந்தோர் செய்துவருகின்றார்கள். இது அந்நாட்டார்களுடைய ஆஸ்தியைக் குறிக்கும்.

ஈசாய் என்னும் வயோதிகர் உலகம் மெச்ச அதிமேன்மையாக வாழ்ந்துவந்தார். இவர் செல்வத்தில் சிறந்த சீமான். கொடையில் பேர்போன வள்ளல். இவரே மேற்கூறிய மக்கள் எண்மருக்கும் தகப்பனுர். இவருடைய ஆட்டு மந்தைகளை மேய்ப்பதின் பொருட்டு ஏவலாட்களுடன் சிறுவனுன தாவீதும் காட்டிற்குச் செல்வது வழக்கம். அப்படிப்பட்ட ஓர் நாளில் அவன் அக்கானகத்தில் மெய்மறந்து கடவுளைச் சிந்தனை செய்துகொண்டிருந்தான். அப்போது அகங்காரமுடன் ஓர் சிங்கம் அவனை எதிர்த்து, மந்தையிற் புகுந்து, ஆடுகளை நாசஞ்செய்ய ஆரம்பித்தது. இதைக் கண்ணுற்ற சிறுவன் இறைவருடைய அனுக்கிரகத்தினுலே சிங்கத்தைப் பங்கஞ் செய்து பெருநிலத்தில் வீழ்த்தினுன்.

மற்றெருமுறை **கோலியாத்** என்னும் பேர் கொண்ட அரக்கன் ஒருவனையும் கடவுளின் அருளினுலே கொன்று வெற்றி பெற்றிருக்கிறுன். கோலியாத் என்பவன் **பேலிஸ்தர்** என்னும் ஓர் பகுதியாருடன் சேர்ந்து இஸ்ரவேலர்களுக்கு விரோதமாகச் சண்டை செய்ய முன் வந்தான். மிகவும் அகன்ற புயங்களையும், பருத்த உடலையு முடையவன். நெருப்புத்தழல் போன்ற இருகண்களைக் கொண்டவன். இடிமுழக்கம் போன்ற பெரும் ஒலியையுடையவன். யூதர்கள் கணக்குப்படி ஐயாயிரம் **சேக்கல்** கனமுள்ள வெண்கலக் கவசத்தை அணியப் பெற்றவன். இம்முரடன் போர்க் களத்தில் தன்னுடன் தனியாக எவனுயினும் சண்டைசெய்ய வரவேண்டும் என்று அழைத்தான். இந்தப்படியே நாற்பது நாட்களாக அரக்கன் போருக்கழைத்து நின்றுலும் எதிரிகளிடமிருந்து ஒருவரும் அவனுடன் சண்டைக்குப் போகவில்லை. அரக்கனுடைய புயபல பராக்கிரமத்தைச் செவியுற்ற எதிரிகள் மிகவும் அஞ்சித் தத்தம் இருப்பிடங்களை விட்டு வெளியே வராது உள்ளே அடைத்துக்கொண்டிருந்தார்கள். இதைப்

பற்றிக் கேள்விப்பட்ட தாவீது வீரங்கொண்டு அரக்கனோடு சண்டை செய்யத் தான் முன் வருவதாக அரசனிடம் தெரிவித்தான். பின் கடவுள் அருளைப்பெற்று அரக்கனை எதிர்த்து அடித்துக் கொன்றுபோட்டான்.

இஃது இவ்வாறு இருந்துகொண்டிருக்க அந்நாடுகளை ஆண்டுவந்த அரசன் ஆண்டவர் முன்னிலையில் பொல்லாதவனாகக் காணப்பெற்றான். அதினிமித்தம் அவனது ஆளுகை எடுபட்டது. அதுகாலை அன்னவனுக்குப்பின் அந்நாடுகளை ஆளுகை செய்தற்குரிய அரசன் ஒருவனை ஏற்படுத்தல் நோக்கமாகத் திருத்தொண்டர் ஒருவர் புறப்பட்டுப் பல நாடுகள் சுற்றி வந்தார். ஈசாயின் மக்களைப்பற்றி அறிந்த திருத்தொண்டர் அவர் வீட்டிற்குச் சென்று தாம் வந்த காரணத்தைத் தெரிவித்தார். வேந்தர்கட்குரிய இலட்சணங்கள் எள்ளளவேனுங் குன்றாத அவர் மைந்தர்கள் தாங்களே அரசர்களாகலாம் என்ற எண்ணத்துடன் சூழ்ந்து நின்றார்கள். ஆனால், '**நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்**' என்பதற்கிணங்க அன்னவர்கள் எண்ணியவாறு கருமங்கள் முடிவு பெறாது யாவும் வீணாயின.

சிறிது பொழுது சென்றது. ஆட்டு மந்தையுடன் சென்ற சிறுவன் நாட்டிற்கு மீண்டு வந்துகொண்டிருந்தான். அவனது அகத்தின் அழகு முகத்தின்கண் மின்னலைப் போன்றவாறு தோன்றியது. அதனை ஞான திருஷ்டியினால் கண்டுகொண்ட திருத்தொண்டர், 'இந்நாடுகளுக்கு அரசனாக இருக்கவேண்டியது நீயே' என விளம்பி தைலத்தை அவன் சிரசில் வார்த்து அபிஷேகம் செய்து அவ்விடம் விட்டு அகன்றார். அபிஷேகம் பெற்ற நாள்முதல் சிறுவன் முன்னிலும் பன்மடங்கு அதிகமாகக் கடவுள் வரத்தை உடையவனாகக் காணப்பெற்றான். பேசுவதெல்லாம் ஞானம், உரைப்பதெல்லாம்

தேவவாக்காகத் தென்பட்டது. பாடல்கள் பாடும் வரமும், கவிகள் செய்யும் அருளும் மிகுதியாக உண்டாயின. கடவுள் ஒருவர் உண்டென எண்ணி 'வையந்தோறும் தெய்வந்தொழு' என்ற குறிப்பை மறவாது கடைப்பிடித்து ஒழுகின சிறுவனுக்குக் கிடைத்த மாண்பின் சிறப்பு என்ன என்பதை அறிந்து கொள்வோமாக.

அவ்வாறின்றித் தத்தம் காலங்களை இறைவர் முன் நேர்மையுடனும் பக்தியுடனும் கழிக்காது இருந்த மூத்த சகோதரர்களுக்குக் கிடைத்த பலன் என்ன என்பதையும் அறிந்துகொண்டோம். ஆனதாலே நம்முடைய அழகும் ஆண்மையும் நல்ல பதவிகளைத் தரமாட்டா. நமது குலமும் கோத்திரமும் நாடாளுங் கோமானுக நம்மைச் செய்யா. ஆகையினால் நாம் நற்கதி யடையவேண்டுமாயின், ஞானம், விவேகம், மனே தைரியம், எடுக்குங் கருமம் சித்திபெறல், ஆகிய இவைகள் நிறைவேற வேண்டுமாதலால், கடவுளை மறவாது, 'வையந்தோறுந் தெய்வந்தொழு' என்னும் உரையை மனத்தில் இருத்தி வைத்துக்கொள்வோமாக.

இவ்வழியை விட்டுவிட்டு எவனொருவன் தன்னையே மேலாக எண்ணி வாழ்க்கை நடத்துவானே அவன் ஒரு போதும் முன்னுக்கு வாரான். கடவுளைத் தேடாத குறையினலே, அவனுடைய ஞானம், மனேதைரியம் முதலியவைகள் தேய்பிறை போல அவனிடம் குறைந்து அவன் இறுதியாக ஒன்றிற்கும் உதவாத மட்டியாகிறுன். ஏனெனில், அவன் கடவுளை மறந்து துதி தோத்திரப் பாக்கள் படியாது போகிறுன். வேத மோதாமலும், ஆலயங்களுக்குச் சென்று இறைவரைத் தொழாமலும் மதி குன்றிப்போகிறுன். அப்போது கடவுளும் தம்மை விரும்பாத அவனைக் கண்ணேக்காது இருந்துகொள்ளுகிறுர். இதுவே, தாங்கள் கண்டதே

காட்சி கொண்டதே கோலம் என வாழ்நாட்களைக் கழிக்கும் அறிவீனர்களுக்குக் கிடைக்கும் பலன்.

> " தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்ற லரிது."

அண்டங்களைப் படைத்துப் பரிபாலித்துவரும் ஆண்டவரை மறப்போர் இதிலும் மேலான அல்லலையே அனுபவிப்பர். இதனை விளக்க இன்னுமோர் உண்மைக் கதையை எடுத்துரைப்போம்.

அநேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், கடவுளுக்குத் தொண்டு புரிந்துவந்த திருத்தொண்டர் ஒருவர் இருந்தார். அன்னாருக்கு இரண்டு ஆண் மக்களிருந்தார்கள். அவ்விளங் குமாரர்கள் மிகவும் பலசாலிகளாக இருந்தார்கள். 'ஓதி பெருத்தாலும் உத்திரத்துக் குதவாது' என்பது அவர்களுக்கே ஆயிற்று. ஒரு பெரிய தொண்டருடைய மக்களென்றால் கடவுள் அவர்கள் புரியுங் குற்றங்களைக் கண்டு கண் ஜாடையாக இருந்து விடுவரோ? அவர்கள் மற்ற மனிதர்களுடன் சண்டை, வீட்டில் சண்டை, தெருவில் சண்டை, கோவிலில் சண்டை செய்து வாதாடி வந்தார்கள். ஏழை எளியோர் ஆலயத்திற்குக் கொண்டுபோகும் படைப்புப் பொருள்களை வலுக்கட்டாயமாக அவர்களிடமிருந்து பிடுங்கிக்கொள்ளுவார்கள். கடவுளைப்பற்றிய அச்சமும் பக்தியும் சிறிதும் அவர்களிடம் காணப்படவில்லை. இவ்வண்ணமாக ஆண்டவருக்கு அடாத காரியங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். இதை அவர்களுடைய தந்தையாரும் பார்த்துக் கண்டிக்காது அவர்களை வளர்த்து வந்தார்.

இது இவ்வாறாக இருந்துகொண்டிருந்தது. 'அரசன் அன்று கேட்கும் தெய்வம் நின்று கேட்கும்' என்பதற்கு

இணங்க, இதனை கடவுள் தமது திருக்கண்ணினுல் பார்த்து விட்டார். அந்தச் சிறு இல்லத்தினருக்கு அல்லல் விளைவிக்க எண்ணிவிட்டார். நாட்கள் பல கடந்தன. யாவும் இனிதாக நடந்துகொண்டிருந்தன. அவ்வாறிருக்கும்போது திடீரென்று அயல் நாட்டு மன்னன் ஒருவன் படையெடுத்து இவர்கள் வசித்த நாட்டிற்குள் வந்தான். சண்டை செய்வதற்காக மக்கள் இருவரும் உடனே புறப்பட்டார்கள். யுத்தம் வெகு பலமாக நடந்தது. நடந்த போரில் மக்கள் இருவரும் மாண்டார்கள். இதனை இல்லிலிருந்து அறிந்த திருத்தொண்டர் இருக்கையிலிருந்து மூர்ச்சையாகி திடீரெனக் கீழே விழுந்து தசரதர் உயிர் துறந்தவண்ணம், இவ்வுலகத்தை நீத்தார். கர்ப்பிணியாக விருந்த அவ்விருவரில் ஒருவன் மனைவியும், ஒரே நாளில் தனது கணவனும், அவன் அண்ணனும் தனது மாமனும் மரித்ததை யுன்னி, அங்கலாய்த்து இகத்தைக் கடந்தாள். அந்தோ! என்ன பரிதாபம். கடவுளை மறந்து தத்தம் வழியிற் சென்ற இருவர் கீழ்ப்படியாமையினுலே அந்தக் குடும்பத்தினருக்கே விளைந்த தீமையை அறிந்தீரோ?

மேற்கூறப்பெற்ற அந்த உண்மைக் கதைகளை நன்கு உணர்ந்த சிறுவர்களே! கடவுளை மறவாது எந்நேரமும் அவர் துதியைச் சொல்லிவந்தவனுக்குக் கிடைத்த மாண்பு என்ன என்பதை அறிந்தீரன்றே? கள்ளமில்லா வள்ளலை எள்ளளவேனும் நினையாது மதியீனமுடன் தத்தம் காலங்களைக் கழித்த மூடர்களுக்குக் கிடைத்த பங்கு என்ன என்பதையும் உணர்ந்தீரன்றே? ஆனதாலே, நாமும் நமது குடும்பமும், நமது நாடும் முன்னேற்றமடைய, ஈடேறும் வழியில் நடந்து செல்ல, இம்மை மறுமைப் பயன்களை அனுபவிக்க, '**வையந் தோறுந் தெய்வந்தொழு**' என்பதை ஒருபோதும் மறவாதிருப்போமாக.

## 2. அடாது செய்வர் படாது படுவர்.

உலகின்கண் எவனொருவன் தன்னுடைய தேகபலம் கல்வியறிவு, தனம் இவைகளை வரையறுத்து, வரம்பு கடவாது நடந்துகொள்வானோ அவன் எத்தகைய இடையூறுமின்றி உய்வான் என அறிந்துகொள்வோம். எவ்வாறெனில் புலி, கரடி முதலிய மாக்களின் பலத்திற்கு ஒப்பாயுள்ள பலத்தை யுடைய ஓர் வீரன் தனக்குள்ள வன்மையை வரையறுத்திருப் பதினால், மிருகேந்திரனை சிங்கத்துடன் போர்புரிய அவன் விருப்புக்கொள்ளான். அந்தப்படியே பத்து வகுப்புக்கள் படித்துத் தேறிய மாணவ னொருவன், தனது கல்வியின் அளவை நன்கறிந்திருப்பதினால், கற்றுணர்ந்த ஆசிரிய ரொருவரிடம் தருக்கம் செய்ய முன்னில்லான். இவ்வாறே ஆயிரம் ரூபாய்களுக்கு அதிகாரியாகிய ஓர் வியாபாரி, தனக்குள்ள தனத்தின் மதிப்பு எத்தன்மையான தென்று அறிந்திருப்ப தினால், கோடீச்வரனிடம் சிறிய காரியத்திற்கும் போட்டி செய்ய மனந்துணியான். இவைகளை எவனொருவன் மீறிச் செல்வானோ அவனே படாதபாடு படுவான் எனக் கொள்ளு வோம். இவைகளை விளக்கச் சில கதைகளைக் கூறுவோம்.

நீர்வளம், நிலவளம் முதலிய எல்லா வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற நாடொன்றில் **வேலன்** என்றொரு வாலிபன் இருந்தான். அவன் சிறுவனாக இருக்கும்பொழுதே அவன் தந்தையார் இகத்தை விட்டுப் பிரிந்தார். ஆனதாலே அவ் வில்லத்துப் பொருள்கள் அனைத்திற்கும் அவனே தலைவ னானான். அவனைக் கண்டித்து வளர்க்கக்கூடிய தந்தையார் இல்லாததினால் காரியங்களை அவன் ஏட்டிக்குப் போட்டியாகச் செய்வான். இனத்தவரைக் காணில் அவர்கள் மேல் எரிந்து

விழுவான். ஏழைகளைக் கண்டால் பிட்சை யிடவேண்டுமே யென்று வருந்துவான்.

நாடோறும் நடக்குங் காரியங்களை அண்டை வீட்டிலிருக்கும் அவன் நண்பன் சிவராமன் கவனித்துவருவான். வேலன் புரியும் காரியங்கள் சிவராமனுக்கு மிகுதியும் வருத்தத்தை உண்டாக்கும். இந்தச் சிவராமன் ஓர் ஏழைவீட்டுப் பையன். குசேலர் உடைகளை ஒத்த ஆடைகளை உடுத்தியிருப்பான். அவ்விதமிருந்தும் அவன் ஒவ்வொரு நாளும் குளித்து முழுகி மிகவும் சுத்தமாக விருப்பான். கடவுளை வழிபடுவான். தனக்குக் கிடைக்கும் ஒரு கிண்ணம் கூழையும் மனங் கோணாது அருந்துவான். ஆசிரியர்களிடம் மிகுந்த மரியாதையுடனும், அன்புடனும் நடந்துகொள்ளுவான். பெற்றோரைத் தெய்வமாக மதித்து அவர்கள் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு தொண்டு புரிவான். இவனன்றோ உத்தமன், சத்புத்திரன்! இவனைக் காணும் மனிதர்கள் இவனைப் புகழ்ந்து களிப்பார்கள். நாட்கள் செல்லச் செல்ல வேலன் தீய வழியில் அதிகமாகச் சென்றுகொண்டிருந்தான். இது சிவராமனுக்கு வருத்தத்தை மூட்டியது. உடன் கல்வி கற்கும் நண்பன் இவ்வாறு போவது அவனுக்கு விருப்பமில்லை.

“ உலகிலே மனிதர்களாகப் பிறந்த நாம் மிகுந்த தனத்தை வைத்திருப்பதின் நோக்கம் யாது? ‘வாரி யிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவன் பேர் நிலை நிற்கும்’ என்பது போன்ற எண்ணங்கள் பிறருடைய உள்ளங்களில் உண்டாகவேண்டாமா? நமது தனத்தைக் கொண்டு எத்தனை ஆண்டுகள் உயிர் பிரியாமல் இங்கு வாழலாம்? என்றைக்காகிலும் ஓர் நாள் நாம் இம்மையை விட்டு மறுமைக்குப் போகவேண்டியதுதானே. ஆனதாலே ‘நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் முந்துங்கள்’ என்னும் வாக்கை

மறந்துபோகலாமா? உன் வலது கை செய்கிறதை இடது கை அறியாதிருக்கக்கடவது என்பதும் நீதியல்லவா? ஆதலால் நண்ப! கடவுளை மறவாது அவரை வழிபடு. பெரியோர்களுக்கு அடங்கி நட, ஏழைகளை மறவாதே, கல்வியைக் கைவிடாதே, வித்தை கற்பிக்கும் ஆசிரியர்களைத் தூற்றாதே. எல்லாரிடத்திலும் அன்புடன் நடந்துகொள். பிராணிகளை வருத்தாதே." இவைபோன்ற புத்திமதிகளை இதமாகப் புகட்டினான் சிவராமன். இவைகளில் யாதொன்றும் வேலனுடைய காதில் விழவில்லை. அவைகள் யாவும் அவ்வப்போதே விழலுக்கிறைத்த நீர்போலாயிற்று.

இஃதிவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்க, நண்பரிருவரும் உலாவிவருமாறு, ஓர்நாள் வெளியேறிச் சென்றனர். அவ்வாறு செல்லுகையில் இளந்தென்றல் மெல்லென மேனியிற்றாக்கிற்று. ஆறுகள், சிற்றோடைகள் பல குறுக்கே ஓடின. பறவைகள் இனிதாகப் பாடின. செஞ்சுடரோன் வேகத்தைக் குறைக்குமாறு கார்முகில் வானிற் படர்ந்தன. அத்தருணத்தில் ஒருவர் சாதாரண உடைகளை உடுத்திக்கொண்டு அவ்வழியே சென்றார். அவருடைய உடையினாலும் நடையினாலும் ஓர் பெரிய தவமுனிவர் என்றெண்ண இயலாது. அம்முனிபுங்கவர் ஏதோ ஓர் காரணம்பற்றித் துரிதமாக நடந்துகொண்டிருந்தார். இதை யறியாத வேலன், 'ஓய், எங்குச் செல்லுகின்றனை?' என்றான். இவைகளைக் கண்ணுற்ற சிவராமன், "நண்ப! வழியே செல்லும் ஓர் பெரியவரை எங்குச் செல்லுகின்றீர் என்று கேட்பதற்கு நீ யார்? அவர் யாரோ! எந்த ஊரோ! என்ன பேரோ! இவைகளை அறியாத நீ வாளாவிரு" என்றனன்.

நண்பன் சொல்லை அற்பமாக எண்ணும் வேலன் மறுமுறையும் அப்பெரியாரை நோக்கி, 'பெரியாரே! என்னுடன்

பேச அச்சமோ? உமக்கு என்ன தெரியும்? வேதத்திற் சிறந்த நிபுணரோ? அல்லது கல்வியிற் சிறந்த கம்பரோ? விளம்பும்' என்றான். இது முனிபுங்கவருக்கு எண்ணி லடங்கா வருத்தத்தை மூட்டியது. எனினும் அப்போது அவனிடம் ஒன்றும் பேசாது, 'இன்று இரவு உன் வீட்டில் உன்னைப் பார்ப்பேன்' எனக் கூறி அதைவிட் டகன்றார். இவைகளுக்குப் பின்பு, வேலன், 'ஓ! பார்த்தாயா!! என் னுடன் பேச அவன் அச்சங்கொண்டான் போலும். இப்போது பேச இயலாதவன் இன்று இரவு என் வீடு தேடிவரப் போகிறானா?" என்று வீராப்புடனிருந்தான். சிவராமனோ, "நன்று, நீ மகா படிப்பாளி, அறிவு மிகுந்தவன், நீ கேட்ட கேள்விகளுக்கு விடையளிக்க அவர் இயலாது சென்று விட்டனரோ? இவ்வாறு எண்ணியதும் மிக நன்று? இனி இன்றிரவு நடக்கும் கூத்தைப் பார்" என்று கூறினன்.

இவைகட்குப் பின்னர், ஓர் ஏழை முடவன் ஆங்கு படுத்திருப்பதை வேலன் கண்ணுற்றான். வயிற்றுக் கொடு மையினால் அவன் இடும் ஓலம் வானபரியந்தம் எட்டிற்று. வேலனைக் கண்டதும், 'அரசே, தவமுனியே, செல்வனே, சீமானே எனக்குப் பிச்சையிடு' என்று கூவினான். இஃது வேலன் காதுகளில் விழவேயில்லை. இவ்வித மிருந்து கொண்டிருக்க திடீரென்று ஓர் ஒலி கேட்டது. அது யாதெனில், சில அரச குமாரர்கள் வேட்டையாடும் பொருட் டுத் தத்தம் பரிகளின்மீது ஏறி வந்ததால் உண்டானதே. அவர்கள் வந்தது வேலனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அவர்களிடம் ஓடினான். களைப்புற்றிருக்கும் அன்ன வர்க்கு வேண்டுவது யாது என வினவினான். தன் கையி லிருந்த இனிப்புப் பண்டங்களையும் பானத்தையும் அவர்கட்குக் கொடுத்தான். அவ்வரசர்க்கு மரியாதையாகப் பொன் நாண யங்களையும் வழங்கினான்.

"கதிர்பெறு செந்நெல்வாடக் கார்க்குலங் கண்டுசென்று
கொதிதிரைக் கடலிற்பெய்யும் கொள்கைபோல் குவலயத்தில்
மதிதனம் படைத்தபேர்கள் வாடினோர் முகத்தைப்பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவர் நிலையிலார்க் கீயமாட்டார்"

என்றபடி பாத்திரம் அறிந்து நன்மை செய்யா மதியற்ற மூடன் இவனன்றோ? அரச குமாரர்கள் அதைவிட்டுக் கடந்தார்கள். நண்பர் இருவரும் வீட்டிற்குத் திரும்ப எண்ணினார்கள். அவ்வாறு திரும்பி வருகிறபோது, ஓர் இளைஞன் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நின்றுகொண்டிருந்தான். அவ்விளஞ்சேய் அவ்வாறு நிற்பதற்குக் காரணம் யாதென அறியுமிடத்து, அம்மாலை ஓரையில் அன்னவன் தன் நண்பர்களால் தனியே விட்டுவிடப் பெற்றதுதான் எனப் புலப்பட்டது. கூட நின்று விளையாடின சிறுவர்கள் இவனைத் தனியே விட்டுக் கலைந்தார்கள். சிறுவனும் மெய்மறந்து கங்குலோரைமட்டும் ஆங்கே தரித்து நின்றுவிட்டான்.

கோபாலன் என்ற அச்சிறுவன் ஓர் ஒப்பற்ற தனவந்தனுடைய அருமந்த பிள்ளை. மன்மதனை நிகர்த்த அழகு வாய்ந்த அருங்குண சீலன். அவனுடைய இயற்கை அழகுடன் ஈராயிர ரூபாய் பெறுமான அணிகலன்களான செயற்கை அழகும் வாய்க்கப்பெற்றிருந்தான். அதனால், இருண்ட அம்மலர்ச் சோலையின்கண் அவன் எழில்மிகப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். இதனைக் கண்ணுற்ற வேலன் சிறுவனோடு வார்த்தையாடி வீண்வம்பு தொடுத்துக் கொண்டிருந்தான். 'தென்றல் முற்றிப் பெருங்காற்றனது போல்' சண்டையும் அதிகமாக ஏற்பட்டது. சிறுவனைக் கொலைபுரிந்து அவனது அணிகலன்களைக் கவரவும் எண்ணிவிட்டான். சிவராமன் இது காரியம்பற்றி எவ்வளவோ எடுத்துக்கூறியும் வேலனுக்கு அவைகள் ஒன்றும் நலமாகத்

தோன்றுதுபோயின. ஆகையினுல் சிறுவனை அணுகினுன். அடித்துப் புடைத்து வருத்தினுன். அடி பொறுக்கமாட்டாமல் சிறுவனும் திடீரென்று கீழே சாய்ந்தான். அதுகாலை, இதுவே தருணம் எனக்கருதி, வேலன் அவனது அணிகள் அனைத்தையுங் கைப்பற்றினுன்.

இவைகளைக் கண்ணுற்ற சிவராமன் மிகவும் அஞ்சி "அந்தோ ! இந்தத் துரோகம் உனக்கேன் ? இந்தப் பழி உன்னை விட்டுவிடுமோ ? இது மனு நீதியாகுமோ ? மாசற்ற மகனுக்குப் புரிந்த இச்செயல் என்னே ? துணையற்றோர்க்கும், சரண் புகுந்தோர்க்கும், பலவீனர்க்கும், தாய் தந்தையற்றோர்க்கும், புருடனை இழந்தோர்க்கும் துன்பு செய்வது கொடிய பாவம் என அறியாயோ ? இஃது என்னே ; நினது உடல் வன்மையின் தைரியமோ, அன்றேல் நின் செல்வத்திரட்சியின் வன்மையோ !

'தெய்வமுள தென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றெறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க்கில்லை தம் இன்புதல்வர்க்கன்றே
பலகாலும் சொல்வார் பயன்'

என்ற வண்ணம் கடவுளின் திருச்செயலை முற்றும் உணர்ந்த ஒருவன் இவ்வாறு புரிதல் என்னவாகும்? கடவுள் ஒருவர் உண்டென்றும், கடவுள் தீயோரை முற்றிலும் வெறுக்கிறுர் என்றும் அறிந்த நீயே இவ்வாறு புரிந்ததினுல், அந்தக் கடவுளே உனக்குத் தீர்ப்பிடுவார். உனது நட்பு இனி எனக்குப் போதும்" என்றுரைத்து அவனை விட்டு பிரிந்தான்.

ஓர் ஒப்பற்ற நண்பனின் நட்பு அன்றேடே ஒழிந்தது. அவன் புரிந்த தீய கருமங்கள் யாவும் பாரச் சுமைபோல் அவன் மனத்தில் தோன்றின. ஒவ்வொரு குற்றமும் அவனை வருத்தியது. மூடனென்றும் லோபியென்றும், கொடிய

மூர்க்கனென்றும், நயவஞ்சகனென்றும், கொலைபாதகனென்றும், நாற்புறமும் அவன் பேர் ஒலித்தது. இவ்வண்ணமாக நேரம் செல்லச் செல்ல விளக்கேற்றும் நேரமும் கிட்டியது. அப்போது வேலனுக்கு அச்சமும், நாணமும் மிகுதியாக ஏற்பட்டன.

சிறிது நேரம் சென்றதும், வேலன் சற்றுக் கண் அயர்ந்து தூங்கினன். அதுகாலை திடீரென்று அவனுக்கு ஓர் தோற்றம் காணப்பட்டது. அந்தத் தோற்றத்தைக் கண்டதும் மிகவும் அஞ்சிக் கலங்கினன். அந்தத் தோற்றம் யாதெனில், முந்தின மாலையில் வழியே சென்ற தவ முனிவரின் தோற்றமே. அவர் வேலன் புரிந்த தீயகருமங்களையெல்லாம் ஓர் பலகையில் எழுதியவராய் கையிற்றூங்கி நிற்கும் உருவத்துடன் தோன்றினர். இதுவே அவனுக்கு மிகுந்த அச்சத்தை உண்டாக்கிற்று. அம்முனிபுங்கவர் அவனை விளித்து, 'மூடனே! நின் கருவம் இருந்தவாறு நன்று! என்னைப்போன்ற தவசிகளை எத்தனையோ தரம் ஏளனம் செய்திருக்கின்றாய். குருத் தொழில் புரியும் ஆசிரியர்களைத் துன்புறுத்தியிருக்கின்றாய். ஏழைகளைக் கண்டதும் அவர்கட்கு அன்னமீயாது ஒளிந்து கொண்டிருந்தாய். ஏழை எளியவர்களை வதைத்திருக்கின்றாய். இறுதியாகக் கோபாலனையும் கொன்றுபோட்டனை. இவ்வாறாக அடாத கருமங்கள் புரிந்த நீ நிதியிழந்து, பிறர் உதவியிழந்து அல்லற் படுவாயாக' என்றுரைத்து மறைந்து போயினர்.

அடாத கருமங்கள் புரிந்த வேலன் இரவிற் கண்ட தோற்றத்தினல் மிகவும் வருந்தினன். முனிபுங்கவருரைத்த வண்ணம் நாளடைவில் அவனுடைய இல்லப் பொருள்கள் யாவும் கயவராற் கவர்ந்து செல்லப்பட்டன. உற்ற நண்பர்

களும் அருங்கிளைகளும் அவன் நட்பை விட்டுப் பிரிந்தார்கள். அவன் குடியிருந்த வீடு தீக்கிரையாயிற்று. இவ்வமயமிருக்கக் கோபாலனைக் கொன்ற மூர்க்கனைத் தந்திரமாய்ப் பிடிக்க இராணுவச் சிப்பாய்களிற் சிலர் ஊரூராய்ச் சென்றார்கள். இறுதியாகக் கோபாலனைக் கொலை புரிந்தவன் வேலன் எனத் தேர்ந்து அவன் வீடு வந்து சேர்ந்தார்கள். இதையறியா வேலன் வெளியே நின்று கொண்டிருந்தான். '**பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல்**' சிப்பாய்கள் யாதொரு கடுமுயற்சியு மின்றி அன்னானைப் பிடித்து அரசன்முன் விடுத்தார்கள். பின் அரசன் ஆணைப்படி ஆயுட்காலமட்டும் அவனைச் சிறையி லிட்டு வருத்தினார்கள்.

அந்தோ, என்ன கதி! அடாத காரியங்களைப் புரிந்தவன் அடைந்த ஆக்கினை என்ன என்பதை அறிந்து கொண்ட தினால், நாம் நமக்கு மிஞ்சின கருமங்களில் தலையிடாதொழுகு வோமாக. கடவுளை ஒருபோதும் மறவாது நடப்போமாக. ஏழைகட்கு உதவி செய்ய முன் வருவோமாக. தாய்தந்தை யரை அன்புடன் நடத்துவோமாக. குருக்களுக்குக் கீழ்ப் படிந்து உய்வோமாக. இதுவே நாம் படிக்கவேண்டிய ஒழுக்க முறையாகும்.

இவ்வண்ணமாகவே, அநேக ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் அயோத்தி நகரில் **தசரதர்** எனப் பெயரிய ஓர் ஒப்பற்ற அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு மூன்று மனைவிகளும் நான்கு குமாரர்களும் இருந்தார்கள். இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்னன் என்பன அவர்கள் பெயராகும். மூத் தோனாகிய **இராமன்** ஜனகன் புத்திரியை மணம் முடித்து அயோத்தியில் வாழ்ந்துவந்தான்.

அவ்வாறிருக்கும் நாட்களில், ஒருநாள் **கைகேயி** என் னும் இளந்தேவி அரசரை அணுகி, 'அரசே முன் எனக்குத்

தந்த இரண்டு வரங்களையும் இப்பொழுதே தரவேண்டுகிறேன்' என்ன ; தசரதரும் மிகவும் தயங்கி, 'பெண்ணே! அது யாதென உரைப்பாயாகில் யான் அதை உனக்குத் தந்திடுவேன்' என்றார். இதற்குள் அவள், 'ஐய! இராமனைப் பதினன்கு ஆண்டுகள் கானகம் அனுப்புதல் வேண்டும், இது ஒன்றாகும். பின் பரதனுக்குப் பட்டம் சூட்டுதல் வேண்டும், இதுவே மற்றொன்றாகும்' எனக் கூறினள்.

இஃது எவ்வாறு நடைபெறும்? எனினும் முன் ஈந்த வாக்கைப் பாதுகாத்தலே அரச இலட்சணமாகும். அதை யுணர்ந்த இராமன் தனது பாரியை சீதையுடனும், இலக்குமணனோடுங் கூடிக் கானகஞ் சென்றனன். **சீதை** கற்பிற் சிறந்தவள். அவளுடைய அழகின் வனப்பு ஆயிரம் நாக்கள் படைத்த அந்த ஆதிசேடனாலுங்கூட பகரவியலாது எனக் கூறுவர். அவள் தனது பர்த்தாவையே தெய்வமாகக்கருதி வாழ்நாட்கள் கழிப்பவள்.

இப்படிப்பட்ட அந்தப் பெருங்குணம் படைத்த அம்மையின் உருவ இலக்கணத்தை நன்கறிந்த இலங்காபுரி மன்னனான **இராவணன்** அவளைக் கவர்ந்து செல்லக் கருதினன். ஓர் நாடாளுங் கோமான் இத்தீய செய்கை செய்வது மனுநீதியாகாதென்பது அவனுக்கு உரைக்கப்பெற்றிருந்தது. பிறன் மனையாளைக் கவருதல் கொடியபாவம் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். இல்லக் கிழத்தியைவிட்டு வேறோர் காரிகையைக் கைக்கொள்வது தன் குலத்திற்குத் துன்பத்தைத் தானே தேடிக்கொள்ளுவது என்பதைத் தீர உணர்ந்திருந்தான். பத்தினிப் பெண்களைக் கற்பழிப்பது அடாத செய்கை என்று நன்கு அறிவான். இவைகள் நிற்க, உடன்பிறந்த **விபீஷணனால்** முற்றிலுந் தடுக்கப்பெற்றான்.

இவைகளை மனத்திற் கொள்ளாது துணிகரமாக இராவணன் அடாத கருமத்தைப் புரிந்தான்.

"முடிப்ப முடித்துப்பின் பூசவ பூசி
உடுப்ப உடுத்துண்ப உண்ணு—இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போடுற்ற பிணம்"

என்பது இலங்காபுரி மன்னனுக்கே ஆயிற்று. பெரியோர் சொல்லை மறுத்தான். மனுதருமத்தை மறந்தான். மாறுவேடம்பூண்டு சீதையைக் கைக்கொண்டான். அந்தோ! இஃது எத்தகைய கொடிய பாவம்!

இராவணன் தனது வன்மையையும் சேனையின் பலத்தையுமே பெரிதெனக் கொண்டான். சீதையைக் கவருதல் பெரிய குற்றம் என்பதை அவன் எள்ளளவேனுங் கருதவில்லை. வரம்பு கடந்து புரியும் இக்காரியம் மிகுந்த அல்லலை விளைவிக்கும் என்பதை அறியாதிருந்தான். இதனை நன்கு அறிந்த இராமன் வானர சேனைகளின் உதவியால் இலங்கையை நெருப்புத் தழலுக்கு உணவாகக் கொடுத்தான். இராவணனின் வீரர்களை அம்புக்கு இரையாகக் கொண்டான். இறுதியாக அக்கொடிய அரக்கனையும் அவனைச் சார்ந்த இனத்தவரையும் நாசஞ்செய்தான். இதுவன்றோ அடாது கருமம் புரிவோருக்குக் கிடைக்கும் பலன்.

இவ்வுண்மையை விளக்க இன்னுமோர் சரித்திரமுங் கூறுவோம். பல்லாண்டுகளுக்கு முன் யூதர் மரபில் சவுல் என்றொரு அரசன் சிறிதுகாலம் ஆண்டுவந்தான். அந்நாட்டாரை ஆளுகை செய்து பரிபாலிப்பதற்கென்று முதன் முதல் தெரிந்துகொள்ளப்பட்ட அரசன் இவனே யாவன். அவன் அரசர்க்குரிய இலட்சணங்கள் பலவும் ஒருங்கே

அமையப்பெற்றிருந்தான். பகைவரை நொடியில் தோல்வி யடையச்செய்து, மேன்மை பெருகும் பராக்கிரமம் அடையப் பெற்றிருந்தான்.

இந்நிலையிலிருக்கும் சவுல் சின்னாள் வரை நெறிதவறாது நடந்துவந்தான். இறைவரும் இதுபற்றி அன்னானுக்கு வேண்டும் அருள், பொருள் இவைகளைத் தந்தருளினர். எனினும் 'போர்முனையில் விழுந்த எதிரிகளின் உடைமைகளைக் கைக்கொள்ளுதல் நலமாகாது' என்பது இறைவனுருடைய கட்டளையாக இருந்தது. இக்கட்டளையை அவனும் அவனைச் சார்ந்தவர்களும் கைக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாயிருந் தும், கைக்கொள்ளாது நின்றனர்.

இவ்வாறிருக்கும் நாட்களில் ஓர் முறை யூதர்களுக்கும் அமலேக்கியருக்கும் கடும்போர் ஒன்று நடந்து. நொடிப் பொழுதில் பொடிப்பொடியாய் மடங்கடித்துவிடக்கூடிய அந்தச் சிறிய சேனையை சவுல் அரசன் வெற்றிகொள்ள இயலாது நின்றனன். காரணம் யாதென அறியுமிடத்து, முன்நடந்த போர் ஒன்றில் இவனைச் சார்ந்த வீரன் ஒருவன் குற்றம் ஒன்று செய்தான் எனவும், அரசன் அதனைக் கவனியாது இருந்தான் எனவும் தெரியவந்தது. அக்குற்றத்தின் பயனாகவே அமலேக்கியரை முறிய அடிக்க இயலாதுபோனது என்று அறிந்துகொண்டான். இவ்வண்ணமாக அழிந்து போகும் பொருள்களை மேலாக எண்ணி இறைவர் திருவாக்கை அலட் சியம் செய்தது அன்னாருக்கு மிகுதியும் வருத்தத்திற்கு இடமாயது.

மற்றொரு முறை இவ்வரசன் தன் ஆண்டவருக்குப் பலி செலுத்துதற் பொருட்டுப் பறை சாற்றுவித்தான். பின் அரசன் குறிப்பிட்ட இடத்தின்கண் எண்ணிலடங்கா ஒழுங்குகள் செய்யப்பட்டன. யாகத்திற்கு வேண்டு

வன யாவும் சேர்க்கப்பெற்று, பலிபீடத்தின்கண் வைக்கப் பெற்றிருந்தன. பரிவாரங்களுடன் கூடி வேந்தனும் அப்போது வந்து சேர்ந்தான்.

ஆடவரும் மங்கையரும் கூடி நின்றார்கள். வேந்தனும் வீரர்களும் ஆசாரியரின் வரவை எதிர்நோக்கி நின்றார்கள். அப்படியிப்படியென்று குறிப்பிட்ட நேரமும் கிட்டிற்று. ஆசாரியரோ வராது பிந்திவிட்டார். இதை நன்குணர்ந்த சவுல், 'இதைக் குறித்து நாம் எத்துணை நேரம் அன்னாருக் காக காத்திருப்பது? ஆசாரியர் வராது போனாலென்ன? யாகத்தை யான் நடத்திவைப்பேன்' எனக்கூறி அவ்வாறே யாகத்தையும் செய்து முடித்தான்.

என்னே! போர்முனையின்கண் நின்று யுத்தம் செய்யும் அரசன் மாவேந்தர்க்குப் பலியிடுதல் நன்றாகுமோ? பல்லாயிரம் வீரர்களைக்கொன்று குருதி வெள்ளத்திற் புரண்ட அரசன் பரமான்மாவிற்குப் பண்டிகை கொண்டாடுவது நியாய மாகுமோ? இஃது அங்குள்ள யாவருக்கும் மிக விந்தையாகக் காணப்பட்டதுந்தவிர கடவுள் திருச்சந்நிதிக்கும் ஏற்காததாக இருந்தது.

மேற் கூறப்பெற்றவைகளை நன்கு கவனித்த பரமனார் அவன் செய்ததை யுன்னி மனம் வருத்தமுற்றார். முன்னொரு சமயம் அவன் கீழ்ப்படியாமையினால் போர்முனையில் கொள்ளைப் பொருள்களைக் கவர்ந்துகொண்டான் என்பதை அவர் மறந்துபோகவில்லை. நிற்க, இப்போது அவன் புரிந்த அநியாயத்தை அவர் சிந்தையிற் கொண்டு அன்னானைத் தண்டிக்கக் கருதினார்.

இவ்வாறிருக்கும் நாட்களில், அவ்வரசனுக்குப் புத்தி தடுமாறியது. ஓர் பொல்லாத ஆவேசம் அவனைப் பிடித்தது.

அவனுடைய இராச்சியம் அவனைவிட்டு எடுபட்டு பக்தி கொண்டு தன் வாழ்நாட்களைக் கழித்த மற்றொரு புருடனுக்கு ஈயப்பெற்றது! இதுவே அவனுக்குக் கிடைத்த பங்கு. ஆனதாலே அடாது கருமம் புரிவர் இத்தகைய பாடுபடுவர் என்பது தெள்ளிதில் புலப்படுகின்றது.

ஆனதால், மேற் கூறப்பெற்ற கதைகளை நன்கறியும் சிறியோரே! வேலன், இராவணன், சவுல் என்பவர்கள் அடாது புரிந்த கருமங்கட்காக அடைந்த ஆக்கினையை உணர்ந்துகொண்டதினாலே, ஒருபோதும் நமக்கு அடாத கருமங்களைச் செய்யாதிருப்போமாக. பெரியோர் சொல்லை அரிதாகக்கொண்டு அதன்படி நடந்துகொள்ளுவோமாக. நமக்குள் குடிகொண்டிருக்கும், செருக்கு, கீழ்ப்படியாமை, கோபம் இவைகளை முற்றிலுமாக நம்மை விட்டு எடுத்துப் போடுவோமாக. இவ்வண்ணம் சீராக நடந்துவரும்போது இறைவர் நம்மீது விருப்புக்கொண்டு நிரந்தரமாக வாழுமாறு ஆசி கூறுவார் என்பதில் ஐயமில்லை.

## 3. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.

பெரியாரைத் துணைக்கொள் எனவும், மூத்தோர் சொல் அமிர்தம் எனவும் உலகோர் அடிக்கடி சொல்வதைக் கேட்கின்றோம். காலங்கடந்த பெரியோர்கட்கே உலக அனுபவங்கள் தெரியும் எனவும், அவர்கள் மொழிவதை மறுக்கின் அல்லல்களேற்படும் எனவும், முற்றிலும் அன்னவர்கள் கட்டளைகளை அற்பமாய் எண்ணிப் போகின்றவர்கள் எஞ்ஞான்றும் கடைத்தேற மாட்டார்கள் எனவும் அவற்றால் அறிவதே பொருத்தமாகும். ஆனது பற்றி மனுக்குல மக்கள் யாவரும் நட்பபுத்தியோடு செய்து முடிக்கத்தகுந்த கருமங்கள் பலவற்றுள்ளும் கீழ்ப்படிதலையே உன்னதமாகக் கொள்ளவேண்டும். அந்தக் கீழ்ப்படியும் தன்மை ஒருவனுக்கு உண்டாகும்போது அன்னான் ஒருபோதும் பெரியோர் மொழிவதை மறுக்க மாட்டான். அவ்விதம் அப் பெரியோர்களுடைய மொழிகளை மறுக்காது அவர்கள் சித்தம்போல் நடக்குங்கால், அவன் அவர்களுக்கு அடங்கிக் கீழ்ப்படிந்து நடக்கின்றான் எனப் புகலுவோம். அவ்விதம் மொழிவதை மறுக்காது நடப்பவனுக்கு ஒருபோதும் அல்லல்களேற்படா எனவும், மறுத்து நடப்பவனுக்கு எல்லையில்லாத் தொல்லைகள் வந்து கூடும் எனவும் அறிந்துகொள்ளுவோம்.

வெகு காலங்களுக்கு முன், ஒரு தகப்பனும் அவருடைய இரண்டு குமாரர்களுமான ஒரு சிறு இல்லத்தினர் வாழ்க்கை நடத்திவந்தார்கள். அந்நாட்களில் தந்தையார் தமது இகபரசுகங்களில் மிகப் பெருகியே வாழ்ந்தார். அவருக்குண்டான அளவற்ற தனத்தை ஒருவரும் மதிக்க இயலாதிருந்தது. ஆடுமாடுகள் ஆயிரம் பதினாயிரமாய் அவர் தொழுவில் நிறைந்திருந்தன. இரு நிலப் பலன்களும் குவிந்து

அவருடைய இல்லை அடைத்துக்கொண்டிருந்தன. இவ்விதமிருந்துகொண்டிருக்க அவருடைய மனையாள் இறந்துபோகச் சேர, மக்களிருவரும் தாயில்லாச் சேய்களாயினர். மக்களிருவரில் இளையவன் தட்டுவாரும் கொட்டுவாரும் இன்றித் தன் மனம்போன போக்கிலே காலத்தைக் கழித்தனன்; தந்தையார் சொல்லைக் கவனியாது நடப்பான். உடன்பிறந்தானைக் கண்டால் எரிந்து விழுவான். அவனுடைய குணங்கள் அங்குள்ளார் எவருக்கும் பிடிக்காது போயின.

இஃதிவ்வாறிருந்துகொண்டிருக்க, ஒருநாள் சிறுவன் தன் தந்தையாரிடம் சென்று " தந்தையீர்! தாங்கள் எனக்குக் கொடுக்கும் பாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிடுங்கள். நான் அதைப் பெற்றுத் தூரதேசம் செல்லவேண்டும்" என்றான். கோடையிடியை யொத்த இந்த வார்த்தைகளைக் கேட்ட தகப்பனார், " மைந்தா! உனக்கேன் இவ்விதக் கெட்ட எண்ணம் பிறந்தது? உனக்கென்ன வலிமை வந்துவிட்டது? உனக்குக் கிடைக்கும் பாகத்தைக்கொண்டு நீ காலங் கழிக்கக்கூடுமோ? நீ சின்னஞ் சிறுவனாயிற்றே. இன்னும் அநேக காலம் என்னுடனிருந்து யாவையும் தீர அறிந்த பின்னர் நீ தனியே வாழ்க்கை செய்யலாம், இப்போது ஒன்றும் வேண்டாம், என் மகனே!" என்பதாக எடுத்துக் கூறினர்.

சிறுவனோ விடாப்பிடியாக அவருடன் தருக்கஞ் செய்து, " ஐய! அந்தக் கவலை உங்கட்கேன்? எல்லாவற்றையும் நானே கவனித்துக்கொள்ளுவேன். யாதொரு தாமதமுமின்றி எனக்குத் தரவேண்டிய பாகத்தைத் தந்தாலாயிற்று இல்லையேல் என் உயிர் இன்றே காலனுக்குப் போயிற்று!" என்று பயமுறுத்தினன். தம் இளங் குமாரன் உயிர் விடுவதிலும், எங்கேனும் உயிர் பெற்றிருத்தலே நலம் என்று எண்ணிய அவ்வயோதிகர் சிறிது தடையுமின்றி அன்ன

வனுக்குக் கொடுக்கவேண்டிய பாகத்தைக் குறைவின்றிக் கொடுத்தார்.

தனத்தைப்பெற்ற பின்னர், சிறுவன் தன்னுடைய நண்பர்களான மடையன், முட்டாள், மூடன் என்பவர்களை யும், பலவித லாகிரிப் பொருள்களையும் சேர்த்துக்கொண்டு அந்நிய நாட்டிற்குச் சென்றனன். ஆங்கும் எண்ணிறந்த போலி நண்பர்களும், மாதர்களிற் சிலரும் அவனுடன் கூடிக் கொண்டார்கள்.

இவன்தான் **கேட்டகுமாரன்** எனப் பெயர் பெறுவன். தந்தையார்க்குத் துணையாக விருப்பதற்குப் பதிலாக அவரைத் துரோகஞ் செய்து சென்றவன். தமையனுடன் ஒற்றுமை யாக விராதபடி பாகத்தைப் பிரித்துப் பாதகருடன் கூடின வன். கல்வியின் சுவையறியாது கருமங்களைப்பேசி வீண் பொழுது கழித்தவன். தகப்பனர் தேடிய சொத்துக்களை வம்புக்கும், மல்லுக்கும் வேசிகளுக்கும் அழித்தவன், தந்தையார்க்கும், தமையனுக்கும், தன் வீட்டாருக்கும் தீய நாமத்தைத் தேடினவன். அந்தோ! என்ன விபரீதம்! தகப்பனரைவிட்டு வந்த சொற்பக்காலத்திற்குள் அவனுடைய ஆஸ்திகளெல்லாம் நாசமாயின. பின்னர் வறுமை நோயால் வாடினன்.

இனி சிறுவன் யாது செய்வான்? கூடியிருந்த போலிக் கூட்டாளிகளெல்லாம் ஓட்டம் பிடித்துவிட்டனர். இவன் கையிலோ யாதொரு காசுங்கிடையாது. கடன் கொடுப் பாரும் அங்கிருந்தாரில்லை. அவன் கண்ணீரே அவனுக்கு உணவாயிற்று. தேம்பித் தேம்பி அழுதான். யாதொரு பயனுமில்லை. இறுதியாக அந்நாட்டிலுள்ள சீமானெருவ னிடம் சேவைசெய்ய ஒப்புக்கொண்டான். இந்நாட்டில் ஆடு மாடுகளை ஓட்டி மேய்த்துவருதல் போல அந்நாட்டில்

பன்றிகள் மேய்ப்பது வழக்சமாயிருந்தது. இவனுக்கோ இவ்விதப் பழக்கம் ஒருபோதுங் கிடையாது. என்செய்வது? தன் மதி கேட்டினுல் நேர்ந்த வறுமையை யுன்னிப் பன்றிகள் மேய்க்க ஒப்புக்கொண்டு சீவனம் செய்தான். பெரியோர் வார்த்தைகளை மறுத்து நடக்கின்றவர்களுக்கு நேரும் கேட்டை நன்குணர்ந்தீர்களன்றே?

இவ்வாறே, வெகுகாலங்களுக்கு முன்னர், மேற்றிசை நாடொன்றில் குமரன் என்றெருரு பாலயனிருந்தான். அவனிருந்த நாட்டிற் கருகாமையில் அடர்ந்த கானகமொன்றிருந்தது. ஆங்கு, மானிடர் கண்களைக் கவரும் அழகு வாய்ந்த மாளிகையொன்றிருந்தது. அம்மாளிகையின் வனப்பை எவருமே எடுத்துரைக்க இயலாது. மல்லிகைக் கொடிகளும், அல்லி மலர்களும், மெல்லிய புற் பத்தைகளும், தூயதா யிலங்கின. நிற்க, அவ்விடத்தின்கண் அநேக மாதர்களும், குற்றேவல் புரியும் தொண்டர்களும் அன்னவர்கள் யாவருக்கும் மேலாக ஓர் அரக்கனுமாக்கக் கூடி இருந்தார்கள்.

செஞ்சுடரோன் உக்கிரத்தினுல், பகற்காலங்களில் இளைப்பாற நினைக்கும் ஆயர்மக்களும், வழிப் போக்கர்களும் அவ்விடத்தே தரித்து நாவறட்சியைக் தீர்க்க எண்ணுவர். அவ்வாறு எண்ணி உட்செல்லுபவரோ, மீண்டும் வெளியே வருதல் கிடையாது. காரணம் யாதெனில், மாதர்களால் உபசரிக்கப்பெற்ற அவ் வழிப்போக்கர்களும் ஆயர் மக்களும் மெய்மறந்து துயிலும்போது, பின்புறத்தே ஒளித்துக்கொண்டிருந்த அரக்கன் அப் பேதையர்களை அடித்து உண்பது நெடுநாள் வழக்கமாயிருந்தது. மாதர்களை நம்பி அகத்தே செல்லும் அனைவரும் அரக்கனுடைய ஆகாரமானுர்கள்.

இத்தீய வழக்கமானது வெகு நாட்கள் வரையிலும் நடந்துகொண்டிருந்தது. எனினும் இது யாருக்கும் மறைவாக

விருந்தது. இவ்விதமிருக்க இதனைக் குணக்சூரிசிங் என்ற ஓர் பெரியார் கண்டுகொண்டார். ஆகவே அன்றுமுதல் அவ்விடத்தே தங்கி, ஆங்குச் செல்லும் நல்லார், பொல்லார் எல்லாரையும் தடுத்து, மாதர்களின் வலையினின்றும், கொடிய அரக்கனுடைய வாயினின்றும் தப்புவிக்க எண்ணங்கொண்டு அவ்வாறாகவே தமது காலங்களை மானிடர் பொருட்டுத் தத்தஞ்செய்து வந்தார்.

இவ்வித மிருந்துகொண்டிருக்க, யௌவன பருவத்தை யடைந்த குமரன் அம்மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்தான். இதனை நன்கு கவனித்த குணக்சூரிசிங் சிறுவனை அணுகி, "சிறுவ! நீ யாது காரணங்கொண்டு இங்கு வந்தனை? உன் கண் முன் நிற்கும் இவ்வழகிய மாளிகையின் வனப்பைக் கண்டு மயங்கினையோ? அல்லது ஆடையணிகள் அணிந்து அன்பின் சொல்லால் அழைக்கும் அரிவையர்களின் வதனத்தைபுன்னி ஆவலுடன் வந்தனையோ? அந்தோ! என்ன விபரீதம். 'கந்துகமதக்கரியை வசமாய் நடத்தலாம், கரடி வெம்புலி வாயையும் கட்டலாம், ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம், கட்செவி யெடுத்தாட்டலாம், வெந்தழலி னிரதம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம், வேறொருவர் காணாமல் உலகத்திலுலாவலாம், விண்ணவரை ஏவல்கொளலாம்' என்று அறிந்த நம்முன்னோரான தாயுமானவர் உரைத்திருக்கும் சுருதியை உணராய் போலும். சிறுவ! 'மாதர்கள் சிரிப்பு மரணச் சங்கிலி' என்பதை யுணர்ந்து கொண்டு இதைக் கடந்து சடுதியில் பின்னிட்டுச் செல்வாயாக. மீண்டும் இவ்விடத்தே தரித்திருப்பாயாகில் இறுதிக் காலத்திற் குள்ளாகுவாய்" என்று எடுத்துக்கூறினார்.

'கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே' என்றவாறு, குமாரனுக்கு அந்தியகாலம் வந்துவிட்டது. பெரி

யார் கூறியதை அற்பமாக எண்ணி 'ஐயா! உங்களுக்குப் பித்த கிறுகிறுப்போ, உரைப்பீர்? நாகரீக மில்லாக் கருநாடக கிழவர்களுக்குத்தான் எதைக்கண்டாலும் அச்சமேற்படும். வாலிப வீரசூரனுன எனக்கும் அல்லல்களேற்படுமோ! தங்களுடைய உபதேசம்போதும், நிறுத்துங்கள்' என்று வெகு அலட்சியமாகக் கூறிவிட்டு, முன்நின்ற மாளிகையினுள் மகிழ்ச்சியுடன் சென்முன்.

குணங்கெட்ட ஓர்மாது மானிடரை வீழ்த்தும் ஓர் படுகுழியென்றும், பரஸ்திரீ மானிடர்களுக்கு இடுக்கமான கிணறு என்றும், அன்னவர்களுடைய எண்ணம் நம்மைக் கொள்ளையாடிக் கொலைபுரியும் இரணகளம் என்றும் அவன் அறிந்து கொள்ளக்கூடாதிருந்தனன். மதுபானம், தீய மாதர் உபசாரம், பொல்லாக் குணமுடையோர் கூடிய இடம் இவைகள் அல்லல் விளைவிக்கும் என்பதை உணராது அவன் ஆங்கு உட்சென்றான்.

அட்போது எண்ணிறந்த பெண்கள் அன்னவனை நண்ணி வந்தார்கள். அவன் நினையாதவண்ணமாக அநேக உபசாரங்களை அவர் செய்தனர். யானைதொட்டாலும், பாம்பு மோந்தாலும், அரசன் நகைத்தாலும், துர்ச்சனர் மரியாதைபண்ணினுலும் தீய மாதர் உபசாரம் செய்தாலும் உயிர்ச்சேதம் வரும் என்றபடி, மாதர் மயக்கத்தில் படிந்த குமரன் மெய் மறந்து சிறிது பொழுது கண்ணயர்ந்தான். அப்போது ஆங்காரமுடன் அவ்வரக்கன் ஓடி வந்து குமரனை அடித்துக்கொன்று அயின்றனன். அந்தோ! என்ன விபரீதம்! அழகிய மன்மதனுக்கு இவ்விதம் முடிவு வருமோ! 'மொழிவது மறுக்கின் அழிவது கருமம்' என்பது உண்மையாயிற்றன்றோ?

இனி நிடதநாட்டுக் கோமானுன நளச்சக்கரவர்த்தி இந்நெறி தவறியதால் அடைந்த அல்லல்கள் எவை என்பதையும் பற்றி நன்கறிந்துகொள்வோம். அன்னுன் மிகுந்த அழகு

வாய்ந்த கட்டழகன். மங்கையர்களால் சிறப்பித்துப் போற்று தல் செய்யப்பெற்ற கம்பீரன். இதுபற்றியே புகழேந்தியாரும்,

"செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்"

என மிகச் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார்.

இவ்வாறிருக்க, நளன் தக்க பிராயம் வந்ததும் **விதர்ப்ப நாட்டுக்** கோமான் புத்திரியாகிய **தமயந்தியைப்**பற்றிக் கேள்விப் பட்டான். அவளோ நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் அருங்குணங்கள் யாவும் ஒருங்கே வாய்ந்தவள். அழகில் மிக வும் சிறந்தவள். ஆதரிக்குங் குணமுடையவள். இம்மாதர சியை மணந்துகொள்ளுதற்பொருட்டு நாட்டுக் கோமக்களுங் கூடிச் சுயம்வர மண்டபம் அடைந்தனர். எனினும் தமயந்தி நளனையே தனது நாயகனாகத் தேர்ந்து அவன் பொற்கழுத்தில் மாலையைச் சூட்டினள். எங்கும் மங்கள ஒலி கேட்க ஆரம்பித் தது. குறித்த தினத்தில் திருமன்றலும் நிகழ்ந்தது.

மணமுடிந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் தமயந்தி ஓராண் மகவையும் ஓர் பெண் மகவையும் ஈன்றெடுத்தாள். நளனுடைய நாடும் விருத்தியாகிக்கொண்டிருந்தது. அன்னான் இல்லற தருமத்தை இனிதுபட நடத்திக்கொண்டுவந்தான். இஃதிவ்வாறிருக்க, தமயந்தியைத் திருமணஞ்சூட்ட அவாக் கொண்டிருந்த கலி ஏமாந்து நளன் மீது வெறுப்புங் கொண்டான். அவனைக் கவிழ்த்துப்போடுவதற்கான சூழ்ச்சி களையும் செய்தான். இறுதியாகப் **புட்கரனை** நளனுடன் சூதாடுமாறு அனுப்பிவைத்தனன். நளனும் அதற்குடன்பட்டு புட்கரனைத் தன்னிடம் அழைத்தான்.

இந்நிகழ்ச்சியை நன்கு கவனித்த மந்திரி முதலானோர் அரசனை யடுத்து, 'மன்ன பெரும! இஃது என்னே! சூதாடு

தல் அரசர்க் குரியதோ? கேவலம் யாதுமறியாத பாமரர்கள் காலப்போக்கிற்காகச் சூதாடுவார்கள். இன்னும் சிலர் சோம்பேறித்தனமாக வயிற்றுச்சீவனம் செய்யுமாறு பந்தயம் வைத்துச் சூதாடுவார்கள். அப்படி விளையாட ஆசிப்பவர் பட்டணங்களுக்கு வெளியேயுள்ள பாழ் மண்டபங்களை அடுத்தும், சத்திரம் சாவடிகளை அடுத்தும் சூதாடுவார்கள். அவ்வாறு எண்ணப்படும் சத்திரமும் சாவடியுமாகுமா இவ்வரண்மனை? இது நீதியுரைக்கும் நீதி மன்ற மல்லவோ? இது மன்னர்க்கு அழகாகுமோ, நிறுத்துங்கள்' என நவின்றார்கள்.

இதுஎன்ன, இலகுவில் நடந்துவிடக்கூடிய காரியமோ? அரசனுக்குப் புத்தி கற்பிக்க மந்திரி முதலானோர் எவ்வளவு முயன்றும் பலன் தராதுபோயிற்று. எளியோர் உரைக்கும் உண்மையைப் பெரியார் கேட்டு நடப்பது முண்டோ? எனினும் மந்திரிகள் மறுமுறையும் அரசனைக் கிட்டி நின்று,

"உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும், வண்மைத்
திருவழிக்கும், மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும், ஒன் றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து"

எனக்கூறி நின்றார்களேயாயினும் அதற்கும் யாதொரு மாறுத்தரமும் பிறக்கவில்லை.

இதன்பின் அரசன் முன்வைத்த காலைப் பின் வைக்க மனந்துணியாது புட்கரனோடு பந்தயம் வைத்துச் சூதாடி யாவற்றையும் இழந்துவிட்டான். நாட்டை இழந்தான். நகரத்தையு மிழந்தான். பின் அவன் தான் உடுத்த உடையுடன் தன் மனையாளையும் மக்களையும் அழைத்துக்கொண்டு நகர்விட்டேகினன்.

அந்தோ! என்ன பரிதாபம்! 'அரசுபுரிந்த ஓர் அரசனுக்கும் இவ்விதத்தீமைகள் விளையுமோ!' என்று எண்ணுகின்றபோது யாம் என் உரைப்போம்? ஆம்! ஞானிகள், குருக்கள், வயதில் மூத்தோர் முதலியவர் கட்டளைகளை மீறுகின்றவர்கள் இத்தகைய கதியைத்தான் அடைவார்கள் என அறிந்துகொள்வோமாக. அவர்கள் அரசர்களாக விருப்பினும் ஆண்டிகளாயிருப்பினும் 'மொழிவது மறுக்கின் அழிவது கருமம்' என்பது உண்மை.

## 4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

ஈயாத உலோபி இருந்தென்ன போயென்ன, எட்டி மரம் காயாதிருந்தென்ன காய்த்துத்தான் பலன் என்ன? என்பது ஓர் வழக்கச் சொல்லாகும். ஏனெனில் படைப்புப் பொருள்கள் யாவற்றிற்கும் மேலாகப் படைக்கப் பெற்றிருக்கின்ற மானிடர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பற்பல செல்வங்களை மற்றவர்களுக்குக் கொடுத்து உதவிபுரிவதே கடனாகும். அவ்விதமிராது எல்லாவற்றையும் யாரொருவர் தாமாகவே அனுபவித்துவருவாரோ அவரைக் குறித்து இது கூறுகின்றது. ஆனதுபற்றி இறைவரால் யாதொரு கைம்மாறுமில்லாது பெற்றிருக்கும் பொருள் முதலியவைகளைத் தம் வசமாக்கி, யாதொன்றும் ஈயாது, தான்தோன்றித் தம்பிரான்களாய் அனுபவிக்க அவாக்கொள்ளும் அற்பர்களை உலோபிகள் என்றும், தாம்பெற்ற செல்வங்களைப் பிறருக்குங் கொடுத்து இன்புறுகின்றவர்களை நன்கொடையாளிகளென்றும் நாம் கூறுவோம். ஈயாதபேர்களோ உலோபி என்ற ஓர் இழிவான நாமம் பெறுவதுடன், அவ்வாறு சேமிக்கப்பெற்ற பொருள்களைத் தாங்களே அனுபவிக்கக்கூடாதவர்களாகவும் போகின்றனர்.

'உன் திறனுக்குத் தக்கதாகத் தர்மசிந்தையுள்ளவனாக இரு. எந்த ஏழைக்கும் உன் முகத்தை மறைக்காதே. அப்போது இறைவரும் உனக்குத் தமது திருமுகத்தை மறைக்கமாட்டார்' எனச் சுருதி கூறியும் இவைகளைக் கவனியாது காலம் போக்குவோரை என்னவென்று கூறுவது?

"நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டையாடி நயம்புரியும்
தாயார் வயிற்றில் நரராய்ப் பிறந்து பின் சம்பன்னராய்
காயாமரமும் வறளாங் குளமும் கல்லாவு மென்ன
ஈயா மனிதரை ஏன் படைத்தாய் கச்சி ஏகம்பனே!"

என்று பட்டினத்தடிகள் கூறி வருந்துதல் போல, மனிதர்களாகப் பிறந்து அளவற்ற தனத்தை வகித்தும் பிறர்

பொருட்டு யாதொன்றும் ஈயாது வாழ்வோருக்கு கிடைக்கும் பலன், காயாமரம்போலவும், தாக விடாய் தீராப் பொய்கை போலவும், பால் சுரவாக் கற்பசு போலவும் வியர்த்தர்களாகத் துலங்குவதே.

இறைக்கின்ற கிணறு ஊறும் எனவும் இறையாக் கிணறு தூர்ந்துபோமெனவும், கொடுக்கிறவன் என்றுங் குறைவடையான் எனவும் கொடாதவனுடைய தனம் கயவரால் கவர்ந்து செல்லப்படுமெனவும் அறிவோம். ஆனதால் உனக்குத் திரன் இருக்கும்போதே, அதாவது செய்யக்கூடிய தனம் முதலியவைகள் இருக்கும்போதே, நல்ல காரியத்தைச் செவ்வனே செய்துமுடிக்கப் பழகவேண்டும். அவ்வாறாக இராது எவனொருவன் உலோபித்தனமாக வாழ்வானே, அவனுடைய தனத்தை "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்ற வண்ணம் கயவர் கவர்ந்து செல்லுவர். இதனை விளக்கக் கதையொன்று கூறுவோம் :—

பல்லாண்டுகளுக்கு முன், பரதநாட்டிற்கு வடமேற்கேயுள்ள நாடுகளொன்றில், தனவந்த னொருவன் வாழ்ந்துவந்தான். அவன் உடன்பிறந்தார் மூவர். அம்மூவருக்கும் அளவற்ற தனமிருந்தது. தனவந்தனை அனந்தசிங் என்பான் அம் மூவரிலும் சிறந்தவனாகக் கருதப்பெற்றான். அவன் சிறுவனாக இருந்தபோதே உடன் படிக்கும் மாணவர்களுடன் சேர்ந்திருக்கமாட்டான். தின்பண்டங்களை இதர சிறுவர்களுக்கீயாது தானே தின்றுகொண்டிருப்பான். இவ்வாறாகச் சிறுவனாயிருக்கும்போதே அன்னான் ஈகைக் குணத்தில் ஊன்றி நில்லாது வளர்ந்துவந்தான். இத் தீயபழக்கம், '**முதற் கோணல் முற்றுங்கோணல்**' என்றபடி, அவனை முற்றும் உலோபத் தன்மைக்கு ஆளாக்கிற்று. இதனால் அளவற்ற தனம் சேர்ந்தது. அநேகமாயிரம் ஆடுமாடுகள் பெருகின. அழகிய தோட்டந் துரவுகள் ஏற்பட்டன. இவ்விதமாகப்

பெருகின போதிலும் நற்குணம் அவனிடத்தில் விளங்காமற் போனமையால், 'கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே' என்ற வண்ணம் அவன் பொருள்களுக்கு இறுதிக் கால மேற்பட்டது.

திடீரென்று ஒருநாள் அவன் இல்லிற் கயவர் புகுந்து பொருள்களைக் கொள்ளையடித்தனர். சிலவற்றைத் தீக்கிரையாக்கினர். சிலவற்றைத் துரவுகளி லெறிந்தனர். சிலவற்றை எளியாருக்கு ஈந்தனர். இவ்விதமாக அந்த உலோபியின் வீட்டுப்பொருள்களை அழித்துவிட்டார்கள். இவைகளைக் கண்ணுற்ற அனந்தசிங் அகம் புழுங்கி அவனியின் வாழ்வை நீத்தான்.

அந்தோ! என்ன பாவம்! செல்வம் மிகுந்த அனந்தசிங் என்பவனுக்கு இதுவோ கிடைத்த பலன்? 'மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப் பாரார்' என்ற வண்ணம் பசிப்பிணியால் வாடினோர் முகத்தை நோக்காது காலம் கழிப்போருக்குக் கிடைக்கும் பலன் இஃதன்றோ; ஒருவன் எவ்வளவு கற்றிருந்தாலும், எத்தகைய செல்வங்களை அடையப் பெற்றிருந்தாலும் கடவுளை அறியாது காலம் போக்குவானேயாகில் எவ்விதம் அவனுக்கு இறைவரடி கிட்டாதோ, அவ்விதமே மிகுந்த தனம் படைத்திருந்தும் அதனைத் தகுந்த வழியிற் செலவு செய்யாது மூடி வைப்பவர்களுடைய செல்வமும் நாசமுறுவதை நன்கறிவோம். இவர்களே உலோபிகள் எனப் பெயர் பெறுவார்கள்.

ஆனால் உலகின்கண் இன்னொரு பகுதியார் இருக்கின்றூர்கள். அவர்கள் ஏழைகளுக்கும் இரங்கார். தான தருமங்களும் செய்யார். தங்களுடைய செல்வங்களைத் தங்களைப் போன்ற செல்வர்களுக்கே அளிப்பர். இவர்களுடைய தன்மை எதைப் போன்றது எனின், 'கதிர் பெறு செந்நெல் வாடக் கார்க்குலங் கொண்டு சென்று,

கொதி திரைக் கடலிற் பெய்யும்' என்றவாறு, மழை முகங் காணுது வாடி வதங்கிக் கீழே சாயும் நெற்பயிர் முதலிய பயிர்ச்செடிகளின் ஏக்கத்தை நன்குணராது எங்ஙனம் வெள்ளப்பெருக்கால் துள்ளிக்குதித்து விளையாடும் கடலிற் கார்முகில் மழையாகக் கொட்டுகின்றதோ அங்ஙனமே வறுமை நோயினுற் பீடிக்கப்பெற்று மெய் இளைத்து வருந்தும் மனிதர்களுக்குச் சிறிதும் ஈய மனமற்றுச் செல்வம் மிகுந்து, ஏழைகளைக் கண்ணுேக்க விருப்பமில்லாத தனவந்தர்களுக்கே தங்களுடைய செல்வத்தைக் கொடுக்க வழி தேடுகின்றனர். இவர்களும் தங்களுடைய செய்கைகளில் யாதொரு பயனையுங் காணுர். ஏனெனில், கார்முகில் வேண்டிய இடத்தில் தன்னிடத்தேயுள்ள தண்ணீரைக் கொட்டாது கடலிற் கொட்டி நன்மை உண்டு பண்ணுதலைப் போலவே இவர்களுடைய செயலும் பயன் அடையாமற் போகின்றது. இவர்களே டம்பாச்சாரிகள் எனப் பெயர் பெறுவர்.

மேற் கூறிய இருதிறத்தாரிலும் சேராதவரே பெரியோர் எனப் பெயர் பெறுவர். அவர் தம்மின் மெலியாரைக் காணு மளவிற் கண்ணீர் சொரிவர். பிறர் வறுமையுற்றிருத்தலைக் கண்டு மனத்துயர் அடைவர். உடுக்க உடையின்றிக் குளிரில் நடுக்கங்கொள்பவர் பொருட்டு அங்கம் சோர்வர். அன்றியும் தமக்கு உண்டாயிருக்கின்ற தனம் முதலியவைகள் தமக்கே உரியவைகளென்று அவர் எண்ணுது, வறுமையுற்ரோரும் அவற்றிற் பங்கு பெறுதல் தகும் என்றெண்ணி மனமுவந்து தானம் வழங்குவர். அப்பெருந்தகையாளர் ஆடையில்லாருக்கு ஆடைகளும், பொருளில்லாருக்குப் பொருளும், வித்தையில்லாருக்கு வித்தையுங் கொடுத்து, இவ்விதமாக யார் யாருக்கு எது எது தேவையோ அது அதையே ஈந்து வருகின்ருர். இவ்வாறு அவர் மனமுவந்து செய்கின்ற இவ்

வித நன்மைகளைக் கண்ணுறும் இறைவரும் அன்னார் மீது பிரீதி வைத்து முன்னிலும் பதின்மடங்கு அதிகப் பொருள் தந்து அவரை ஆசிகூறுகின்றார்.

அவர் இல்லம் அப்போது எத்தகைய சிறப்பாய்த் துலங்கும் என்பதைக் கண்ணுறுவோம். வண்டி வாகனாதிகளும் நிதிகளும் பெருகுகின்றன, இளங்குமரர்களும் கிளைகளும் தோன்றி அருள்பெற்று விளங்குகின்றனர். பால் சுரக்கும் ஆவினங்களும், ஆல்போல் தழைக்கும் அரிய மாவினங்களும் கணக்கிற் படாது வளருகின்றன. எங்கும் சங்கீத ஒலிகளும் மங்கள தோரணங்களும் புலப்படுகின்றன. வறுமையுற்றோருக்குப் பெரும் மனத்துடன் ஈந்தும், ஏழைகளின் முகம்பார்த்து வழங்கியும் வாழுகின்றவர்களுக்குக் கிடைக்கும் பிரதிபலன் இவைகளே. இதனை நன்கு விளக்க, சிறந்த வள்ளலென்று பெயர்பெற்ற கள்ளமனமில்லாக் காளத்தி என்பாரின் சரிதையை ஈங்கெடுத் துரைப்போம்.

பல்லாண்டுகளுக்கு முன்னர், வானோரும் பூதலத்தோரும் கொண்டாடும்படியான திருநின்ற ஊரிலே ஒரு சிறந்த கொடையாளி யிருந்தார். அவர் ஈகையில் கர்ணனை யொத்தவர். இரப்போருக்கு இல்லை யென்னாதவர். தஞ்சமென்று வந்தவர் சஞ்சலம் நீங்கி நெஞ்சம் மகிழ உதவி செய்பவர். அகதியா யடைந்தவரை அன்புடன் ஆதரிக்கும் குணமுடையவர். அன்னவருடைய ஈகைக் குணத்தினையும் இரக்க சுபாவத்தினையும் காணும் நாவலர்களும் பாவலர்களும் அவரை அணுகித் தம் வறுமையை எடுத்துரைத்து இடர்க் கடல் கடப்பது வழக்கம்.

அந்நாடாளும் அரசனோ, மேற் கூறிய உத்தம குணங்கள் சிறிதும் இல்லாதவன். அவன் நடையிலும் வஞ்சன், கொடையிலும் கஞ்சன். தன்னண்டை வந்தவர் வறுமையை நீக்காது

இன்னும் அதிகச் சிறுமையைச் சேர்த்து அனுப்புவது அவன் இயல்பு. இவைகளைக் கண்ணுறும் நாவலர் முதலிய பாவலர்கள் தம் வறுமையைச் சிந்தித்து, 'கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டிற் கடும்புலி வாழுங் காடே நன்று,' என்று கூறி அவனைவிட்டுச் செல்வர். இவ்வாறாக அரசனுடைய துர்க்குணங்கள் வெளிப்படவே, காளத்தியின் சிறந்த இலட்சணங்கள் நாற்றிசையும் பரவின.

இவ்விதமாகத் தன்னுடைய புகழ் சிதையவும், காளத்தியின் புகழ் ஓங்கவும் கேள்விப்பட்ட அரசன் காளத்தியை வரவழைத்து, 'ஓய்! நீவிர் இனிமேல் இவ்வாறு இரப்போர்களுக்கு ஈவீராகில் உமது பொருள்கள் யாவும் என்னாற் கவர்ந்துகொள்ளப்படும்'' எனக் கூறினன். இவ்வநியாயத்தைச் செவியுற்ற காளத்தி அரசனை நோக்கி, "அரசே! இஃதென்ன நியாயம்! என் பொருள்களை என் சித்தம்போல் நான் செய்வதைத் தடுக்கும் நீர் யார்? அள்ளிக் கொடுக்கும் அரிய கரங்கள் அரசர் முகம் பார்த்துப் பயந்து நிற்குமோ?" எனச் சாற்றி அவ்விடத்தை விட்டகன்றார்.

காளத்தியின் கடுஞ் சொற்கள் அரசன் அகத்தில் அம்பு போல் பாய்ந்தன. கனல்போல அவன் கண்கள் சிவந்தன. தன் கரிய மீசை துடிக்க, அவன் அரிய காளத்தியைத் தூற்றினன். ஆலகால விடம்போல சீறி, தன் உரை மீறிய காளத்தியின் இல்லைச் சூறையாடுமாறு கற்பித்தனன். அந்தோ! என்ன விபரீதம்! இது இப்படியும் நடக்குமோ? காளத்தியின் வீடு கொள்ளையாடப்பெற்றது. பொருள்கள் யாவும் கவர்ந்து செல்லப்பட்டன. அவர் தங்குவதற்கு இடமுமில்லை. தனித்து வரும் ஏழைகளுக்கு வழங்க அவரிடம் தனமுமில்லை. வீடு விட்டு யதேச்சையாய் வாழ அவர் காடு சென்றார். அங்கு அவர் இடிந்து பாழாய்க் கிடந்த ஓர் மண்டபத்தில் தங்கியிருந்தார்.

இது இப்படியிருக்க, பசிப்பிணியால் வாடி வருந்தித் தள்ளாடி அங்கம் சோர்ந்துபோன ஓர் தரித்திரன் வறுமையின் கொடுமையால் காளத்தி வள்ளலைத் தேடி அவர் வீட்டுக்குச் சென்றான். செல்லும் வழியில் இருள்வந்து கூடினமையால், ஊருக்கு வெளியேயுள்ள மண்டபத்தில் இரவைக் கழித்துபோக எண்ணங் கொண்டான். அவ்விடத்தே காளத்தி யிருந்தும் அன்னாரை அறிந்துகொள்ளக் கூடாமற்போயினன். இவ்வா றிருக்க நடுசமயத்திற் பசிப்பிணி அவனை வருத்தலும்,

> " நீளத் தொடர்ந்தாயே நீங்கா நிழல்போல
> நாளைத் தொடர்வாயோ நல்குரவே—காளத்தி
> நின்றைக்கே சென்றுவிட்டால் நீஎங்கே நானெங்கே
> இன்றைக்கே சற்றே யிரு "

என்னும் ஓர் அரிய வெண்பாவைப் பாடினன்.

வெண்பாவின் பொருளை யுணர்ந்த காளத்தி மனம்வருந்தி, 'அந்தோ, யான் இனி என்செய்வேன்! நல்குரவால் அல்லற் படும் இவன் நாளை என் இல்லம் சென்று காணாது வருந்து வனே! இவனுக்கு வழங்க என்னிடம் யாதொரு பொருளும் இல்லையே! இல்லில் என்னைக் காணாது இவன் மனம் புண்படு தற்கு முன்னரே யான் மண்ணை நீத்து விண்ணை யடைதல் நல மாகுமன்றோ!' என எண்ணிக்கொண்டு விரைந்து தம் வீட்டிற்குச் சென்று அங்குப் புழக்கடையில் இருந்த நாகப் புற்றிற் கையை விட்டார். நாகம் அவரைத் தீண்டுதற்குப் பதிலாகத் தனது இரத்தினத்தைக் கக்கிக் கொடுத்தது. இதனைக் கண்ணுற்ற காளத்தி அதிசயப்பட்டு அந்தப் புற்றை விட்டு வீட்டினுட் சென்றார்.

மறுநாள் பொழுது எப்போது விடியும் என்று பேரா வலுடன் காத்துக்கொண்டிருந்த தரித்திரன் வைகறையில் எழுந்து கள்ளமன மகற்றிக் கடவுளைத் தொழுது, காளத்தி

யின் இல்லை நோக்கிச் சென்றான். இவன் வருகைக்குக் காத்துக்கொண்டிருந்த காளத்தி அவனை அன்புடன் வரவேற்று அரிய உபசாரம் செய்து, அவன் எதிர்பாராத வண்ணம் உயர்ந்த நாகரத்தினத்தை யளித்தார். தரித்திரனும் பெரு மகிழ்வுடன் அவரை வாழ்த்தி, 'இன்றே என் கலி நீங்கிற்று' என எண்ணிக்கொண்டு அரசனை அணுகி 'அரசே, என்னிடம் ஓர் நாகரத்தினம் உளது. அதற்குத் தகுந்த பொருள் கொடுக்க உம்மாலேயே ஆகும்' என்று கூறினன்.

இரத்தினத்தைக் கைப்பற்றிய அரசன் அகமிக மகிழ்ந்து,' அன்ப! இத்தகைய இரத்தினம் உனக்கு எங்கிருந்து அகப்பட்டது?' என்று கேட்க, 'அரசே! காளத்தியார் எனக்கு இதைத் தந்தார்' என விடை சாற்றினான். இதைக் கேட்கவே எரிகிற தீயில் எண்ணெயை விட்டதுபோல் ஆயிற்று அவ்வரசனுக்கு. ஆகவே காளத்தியை உடனே அழைப்பித்து, அப்பொருள் எங்குக் கிடைத்தது எனவும், ஈயலாகாதெனக் கற்பித்தும் மீறி ஈந்தது என்னே எனவும் பலவாறு வினவிக் கொண்டிருந்தான்.

வேந்தனுடைய கேள்விகளுக்கு, "மன்னர் பெரும! நீர் எனது உடைமைகளைக் கவர்ந்து சென்ற பின்னர் இந் நல்குரவோன் என் இல்லம் வந்து சேர்ந்தான். இவன் பொருட்டு அங்கம் சோர்ந்து யாது செய்வதென்று திகைத்தேன். இறுதியாக வழி யொன்றுங் காணாததனால் நாகப் புற்றிற் கையை இட்டு நாக விஷத்தால் உயிரை மாய்த்துவிடலாம் என எண்ணி அப்புற்றிற் கையை விட்டேன். ஆயினும் நாகந் தீண்டி இறந்துபோவதற்குப் பதிலாக, இத்தகைய நன்மை பெற்றேன். அவ்வாறு அடைந்த நன்மையை அவனுக்கே அளித்தேன். இதுவே நடந்த விவரம்" எனக் காளத்தி விடை கூறினர்.

இவைகளைக் கேட்ட அரசன், 'ஆ! என் உத்தமப் பிரியா! நீயே உத்தமன். நீயே சத்புத்திரன். யான் உனக்கு இழைத்த தீமைகளைக் குறித்து வருந்துகின்றேன். நீ அவைகளை மனதிற் கொள்ளாது என் குற்றத்தை மன்னித் தருள்வாயாக. இது போக, என் அரண்மனையிலும் இத் தகைய தருமம் இனி இனிது நடைபெறல் வேண்டும். அத் தகைய சத்கருமம் நடந்தேறுமாறு நீயே தலைநின்று நடத்தி யருளல் வேண்டும்,' என வேண்டினன். நடந்தவைகளைக் கண்ணுற்ற காளத்தி அதிசயித்து, அன்றுமுதல் அரச னிடத்தில் தருமகர்த்தாவாக விளங்கினர்.

மேற்கூறிய சரித்திரங்களை நன்கு சிந்திக்கும் சிறுவர் சிறுமிகளே! நீங்களும் உங்கள் வாழ்நாட்களில் நன்மை செய்யவும், தான தருமம் பண்ணவும், இரக்கச் சிந்தை முதலியவைகளிற் படிந்திருக்கவும் முன்னிற்பீர்களாக. உங்கள் இல்லத்தைத் தேடி வருகிற ஏழைகளின் முகம் கோணாது உங்கள் நிலைமைக்குத் தகுந்த அளவாய் மனப்பூர்வ மாய்க் கொடுக்கின்ற தருமமானது வீண் போகாதென அறி வீர்களாக. '**தருமம் தலை காக்கும்**' என்னும் சுருதியை மறவாதிருப்பீர்களாக. அவ்வாறில்லாது, உங்கள் பொருள்களை ஈயாமல் மூடி வைப்பீர்களாகில் அதனாற் கிடைக்கும் பலன் என்னவென்று உணருங்கள். கடை நாளில்' **காது அறுந்த ஊசியும் நம்முடன் வாராது**' என்பதைத்தான் அறிந்து கொள்வீர்கள். இதுபோக, வாழ்நாட்களில், 'இவன் உலோபி' என்ற ஓர் தீய நாமத்தையும் பெறுவீர்கள். இதுவே புவியிற் கிடைக்கும் பலனாகும். ஆனதுபற்றி மேற்கூறிய இரு சரித்திரங்களையும் சிந்தனை செய்து மெய்ப்பொருளைக் கொண்டு நற்பலன் அடைந்து இன்புறுவீர்களாக.

## 5. தந்தைக்கு உகந்த தநயன்.

அரசனுக்கு அடங்கி வரும்பொருள் உரைத்து நடக்கும் மந்திரியை நன்மந்திரி யென்றும், அரசனுக்கு உகந்தவன் என்றும் எண்ணுவோம். மனுநீதி வழுவாது மனு தருமத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோரை உத்தமர்களென்றும் கடவுளுக்கு உகந்தவர்களென்றுங் கூறுவோம். இவ்வண்ணமாகவே, பெற்றெடுத்த தாய் தந்தையரை அன்புடன் கொண்டாடி அவர்கள் கட்டளைகட்கு அடங்கி நடக்கும் சிறுவர் சிறுமிகளைப் பெற்றோர்க்கு உகந்த பிள்ளைகள் எனப் புகல்வோம்.

நம்மை ஈரைந்து திங்களாய்ச் சுமந்து ஈன்றெடுத்த மாதாவை, 'மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்' என்பதனாலே நாம் உள்ளளவும் மறவாதிருப்பது கடனாகும். சிறுவர்களாக இருக்கும்போது பெற்றோர் சொல்லுக்கு எவ்விதம் கீழ்ப்படிந்து நடந்துவந்தோமோ அவ்விதமே முதுமையிலும் அப்பழக்கத்தைக் கைவிடாதிருக்கவேண்டும். இவ்வாறு நடக்கின்றவர்களைத் தாய் தந்தையருக்கு உகந்த பிள்ளைகள் என்றறியலாகும்.

இவ்வருங்குணம் மனிதர்க்கு ஏற்படுதலே சாலச் சிறந்ததாகும். இதுவே நம்மை முன்னிலைக்கு வழிநடத்துகின்ற தூண்டுகோல் எனவும் அறியலாம். நம் பெற்றோரைப் பேணுகிற பூரண அன்பிற்கு இதுவே அறிகுறி என்னலாம். முதல் முதலாக நாம் படிக்கவேண்டிய பாடமும் இதுவேயாகும். கீழ்ப்படிதல் என்னுங் குணம் ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால் அதுவே அவனை மேற்பதவிக்கு நடத்துங் கருவியாக விருக்கிறது. மற்ற நற்குணங்கள் பலவும் ஒருவனுக்கு இருந்தும் கீழ்ப்படிதல் என்னும் இவ்வரியகுணம் இல்லாதுபோமேயானல் அதனல்

யாதொரு பயனுமில்லை. ஆனதுபற்றி அன்பு, இரக்கம், ஈகை முதலிய சிறந்த இலட்சணங்களுக்கு முதற் கருவி கீழ்ப்படி தலே என்பது தெளிவாகிறது. ஆகவே, இம்மையில் நாம் இன்புற்று வாழ்வதற்கு இன்றியமையாது இருக்கவேண்டிய முதல் இலட்சணம் கீழ்ப்படிதலே என்பதை மறவாதிருப்போமாக.

நாம் நம் தாய் தந்தையரை மகிழச் செய்வது கீழ்ப் படிதலாலேயாம். ஏனெனில் அவர்கள் நம்மைப் பார்த்து, 'மகனே இதைச் செய்,' அல்லது 'இதைச் செய்யாதே' என்று கட்டளை கொடுக்கும்போது அன்னார் எண்ணம் போல் நடந்தால் அதுவே அவர்களை பெரிதும் மகிழப் பண்ணுகின்றது என நன்கறியலாம். அவ்வாறின்றி, காரியத்தை எட்டிக்குப் போட்டியாய்ச் செய்கின்றபோது அது அவர்களை மனம் வருந்துமாறு செய்கின்றது என உணர்ந்து கொள்ளுவோமாக. அவ்வண்ணமே மாணவர்கட்குக் கொடுக்கப்படுகின்ற கட்டளைகட்குக் கீழ்ப்படிந்து நடந்தால் அவர்கள் நன்மை பெறுவதையும், கீழ்ப்படியாது மீறி நடந்தால் தீமை அடைவதையும், காண்போம். இது நிற்க, தொழிலாளி தன்னுடைய முதலாளியின் எண்ணம்போல் நடவாது தன் எண்ணம்போல் நடந்தால் வெளியே துரத்திவிடப்படுவதையும் நன்கு உணர்வோம். போர் முனையில் சண்டை செய்யும் வீரர்கள் தத்தம் அதிகாரிகளின் கட்டளைகட்கு அடங்கி உடனே குறிப்பிட்ட வேலைகளைச் செய்தல் வேண்டும். அவ்விதம் செய்யாதுபோனால் துப்பாக்கியாற் சுடப்பட்டு அவர் உயிர் துறப்பதையும் நன்கறிவோம்.

கீழ்ப்படியாமையினாலே நேருகின்ற அல்லல்களைக் கவனிக்குஞ் சிறியோரே! உங்கள் மாதா பிதாக்களுக்குச் செவிகொடுங்கள். அவர்கள் இடும் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு நடவுங்கள். ஆசிரியர், குரு முலிதயவர்கட்கு

அடங்கி நடவுங்கள். அரசனுக்கும் அரச கட்டளைகட்கும் கீழ்ப்படிந்து, ராஜ சட்டத்தை மேன்மையாகக் கொள்ளுங் கள். இவைகளைக் கவனித்து நெறிதவருது நடக்கின்ற போது நாம் ஒருபோதும் துன்புறமாட்டோம் என்பதை அறிந்து கொள்ளுவோமாக. அவ்வாறின்றிக் கீழ்ப்படியாது மீறி நடத்தும் காரியங்களால் உடனே அல்லல்களை வரு வித்துக்கொள்ளுகிறவர்களாக இருப்போம்.

மாதா பிதாக்களைத் தெய்வங்களாக மதித்துத் தத்தம் வாழ் நாட்களைக் கழிக்கும் சிறுவர் சிறுமிகள் மிகுந்த நன்மைகளையே கண்டடைவார்கள். பெற்ருேர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக் கின்றபோது ஏதேனும் துன்பம் நேரிடினும் பிள்ளைகள் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள். தங்கள் உயிருக்கே மோசம் வரினும் தாங்கள் கொண்ட கருமத்தை அவர்கள் பொருட்டு அவ்விளைஞர்கள் செய்தே முடிப்பார்கள். இவர்களன்ருே உத்தம குணம் நிறைந்த சிறுவர்கள்! இவர்களையே மாதா பிதாக்களுக்கு உகந்த பிள்ளைகள் எனப் புகல்வோம். அப்படிப்பட்டவர்களே நாற்றி சையும் புகழ்சாற்றப் பெறுவார்கள். இறந்தாலும், அவர்க ளுடைய பெயர் இம்மண்ணுலகில் தொனித்துக்கொண்டிருக் கும். இத்தகைய சிறந்த குணம் படைத்த பலருடைய சரிதைகளை இங்கு எடுத்துரைப்போம்.

தயரத மன்னன் அயோத்தியை ஆண்டுவந்த நாட்களில், ஓர் ஏழைப் பிராமணன் தனது மனைவியோடும் ஏக புதல்வ னேடும் வாழ்ந்து வந்தான். அப்பெற்ருேர் வயது முதிர்ந்த வர்களாக விருந்தார்கள். அதனுல் உடல் வன்மை குறைந்து கண் பார்வை அற்றிருந்தார்கள். இவ்வாறிருக்க, காசிக்குப் போகவேண்டு மென்ற எண்ணம் அவர்களுக்கு உண்டா யிற்று. புண்ணிய பூமியாகிய காசிக்குச் செல்லவேண்டு

மென்றும், அங்குத் தீர்த்தமாடிப் பாவங்களைப் போக்குதல் வேண்டும் என்றும் கொண்டிருந்த பெற்றோர்களுடைய அவாவை நிறைவேற்றுதற் பொருட்டு மகன் முன்வந்தான். ஆனதுபற்றி, காவடி ஒன்று கட்டி அதன் ஓர் புறத்தில் தாயையும், மற்றொரு புறத்தில் தந்தையையும் வைத்து, அவர்களைச் சுமந்து சென்றான்.

இவ்வண்ணமாகப் போகின்றபோது, தாகவறட்சியினால் நாவறண்டுபோவதைப் பெற்றோர் தம் மைந்தனுக்கு அறிவித்தார்கள். இதைச் செவியுற்ற மைந்தன் அவ்விடத்திலேயே காவடியைக் கீழே இறக்கி வைத்துத் தண்ணீர் கொண்டுவரும்படி ஆரண்ணியத்தை அணுகினன். அங்கே சிறுவன் பொய்கை ஒன்றினைக்கண்டு தண்ணீரையும் முகந்தான். அப்போது வேட்டைக்கு வந்திருந்த தயரதன் ஏதோ ஓர் விலங்கு தண்ணீர் அருந்துகிறதென எண்ணி ஒலி வந்த பக்கமாக அம்பு ஒன்றினை விட்டான். அது சிறுவன்மீது தைத்தது. அவன் உயிர் துறந்தான். அந்தோ! என்ன காரியம் நடந்தேறியது! பெற்றோர் கட்டளைகட்கு இணங்கி வந்த சிறுவனுக்கு நேரிட்ட துன்பம் யாது? எனினும் அவன் உயிர்துறந்தானேயன்றி அவனது நற்குணம் இன்னும் மறையவில்லை. அவனுடைய சிறந்த குணத்தின் புகழைத் துதியாதார் இவ்வண்டத்தி லில்லை. இவனன்றோ பெற்றோர்க்கு உகந்த பிள்ளை! தன் உயிர்நீங்குந் தறுவாயிலும் தன் பெற்றோரை மறவாது அவர்களுடைய எண்ணத்தை நிறைவாக்குதற்பொருட்டு அவருக்குக் தண்ணீர் கொடுக்குமாறு அவன் அரசனை வேண்டினன்.

இதனை விளக்க இன்னுமோர் உண்மைக் கதையை யீங்குத் தொடுப்போம். 1798ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் எகிப்து தேசத்தின்கண் ஓடிக்கொண்டிருக்கும் நீலநதியின் முகத்துவாரத்தில் ஓர் சண்டை நடந்தது.

அப்போது, ஓரியண்ட் என்னும் பிரஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமாயுள்ள கப்பல் ஒன்றின் தலைவர் தமது மகன் கசபியன்கா என்னும் சிறுவனை நோக்கி, 'இவ்விடத்தை விட்டுப் போகாதே' என்று கட்டளையிட்டார். இவ்வாறு அவர் கட்டளை கொடுத்த பின்னர் அவர் கப்பலினுட் சென்றார். அச்சமயம் எதிரிகளின் குண்டுகள் பல கப்பலின் மீது தாக்கின. அதனுல் கப்பலில் தீப்பற்றியது. கப்பலுட் சென்ற தலைவரும் குண்டுக்கிரையாயினர். இதற்குள்ளாக, சூழ்ந்து எரியும் நெருப்பு சிறுவனையும் தாக்க ஆரம்பித்தது, அப்படிப் பட்ட சமயத்திலும் சிறுவன் அதை விட்டு அகலாது தந்தையாரின் மறு உத்தரவுக்காகக் காத்திருந்தான். 'தந்தாய்! இன்னும் நான் இவ்விடத்திலேயே நிற்கவேண்டுமோ? என்று கேட்டான். கேட்ட சிறிது நேரத்தில் நெருப்பின் வேகத்தால் சிறுவன் அவ்விடத்திலேயே மாண்டான். அவனுக்கு வயது பதின்மூன்றே.

இவனன்றே தந்தையாருக்கு உகந்த தநயன்! தன்னையீன்ற தந்தையார் தனக்கு ஓர் துன்பமும் உண்டாக எண்ண மாட்டார் என்று அறிந்திருந்தான். அவருடைய கட்டளைக்கு இணங்குவதே சிறந்த இலட்சணம் என்றும் உணர்ந்திருந்தான். ஆகையால் சிறுவன் தனது தந்தையாருடன் உயிர் துறந்தான். இத்தகைய உண்மையும், பிதாவிடத்து பக்தியுமுடைய கசபியன்காவை அந்நாடு கொண்டாடிற்று. அவன் மரித்தும் அவனுடைய நற்குணத்தையும், பிதாவின் கட்டளையைக் காத்து நின்றதையும் நாம் இன்னும் அடிக்கடி பேசி வருகிறோம். இவைகளை நன்குணரும் சிறுவர்களே! உங்கள் பெற்றோர்களுடைய கட்டளைகளைச் சிரமேற்கொண்டு நடவுங்கள். பெற்றோர் கட்டளைகட்கு இணங்கி நடப்பதே பிள்ளைகட்கு அழகாகும். இவ்வாறு சிறு வயதுமுதலே கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாய் வளருகிறபோது அது அவர்

களை மேலான நிலைமைக்குவர வழிநடத்தும் என அறிந்து கொள்ளுவோமாக. அவர்கள் இறந்தாலும் அவர்களுடைய பெயர் ஒரு போதும் இறவா. இதை விளக்க இன்னுமோர் கதையை இங்கு எடுத்துரைப்போம்.

பல்லாண்டுகளுக்குமுன், ஆபிரகாம் என்ெருரு பெரியாரிருந்தார். அவர் அறிவிலும் வயதிலும் முதிர்ந்தவர். செல்வத்திலும் கொடையிலும் பெரியவர். கடவுள் பக்தி மிக அதிகமாகக் கொண்டவர். இக்காரணம் பற்றி அன்னுர் மரபினோரான யூதர்கள் அவரைத் தம் தந்தையார் என்டார்கள். இவருக்கு 'முற்பிதா' என்ெருரு மறு பெயரும் உண்டு. 'விசுவாசத்திஞல் நீதிமான் பிழைப்பான்' என்னும் சுருதி விளங்க, அவர் கடவுளிடங் கொண்டிருந்த பக்தி, கீழ்ப்படிதல், விசுவாசம் ஆகிய இவைகளால் தம் ஆயுட்காலத்தின் இறுதியில் மிகுந்த நன்மைகளைக் கண்டறிந்தார். இதுபற்றி 'விசுவாசிகளின் தகப்பன்' என்ெருரு சிறப்புப் பெயரும் அவருக்கு உண்டாயிற்று.

அரசர்களுடைய உறவும் இறைவருடைய அருளும் அதிகமாக இருந்தமையால், அவர் மிகுந்த தனத்தை வகித்திருந்தார். அவருக்கு ஆட்டு மந்தைகளும், ஒட்டகக் கூட்டங்களும் மிகுதியாக இருந்தன. ஏவலர்களும் கணக்கிடப்படாதிருந்தனர். அவருடைய மனைவியார் அவருக்கு ஒப்பற்ற ஓர் நன்மந்திரி. தம் கணவரைத் தெய்வமாகக் கருதும் மாண்பினையுடையவர். அடுத்தவரை ஆதரிக்குங் குணமுடையவர். இவர்களுக்கு இத்தகைய செல்வங்கள் பல விருந்தும்.

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசிற்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்,"

"சொன்ன கலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி"

என்றபடி, சிறுவர்கள் இல்லாமற்போனல் யாது மகிழ்ச்சி யுண்டாகும்? இதுபற்றி அப்பெரியார் வேளா வேளைகளில் வருந்துவது முண்டு. சிறுவர்க ளில்லாத வீடு மதி யில்லாத வானம் போலவும், சுருதி யில்லாத கானம் போலவும், நிதி யில்லாத தானம் போலவும், கதி யில்லாத விமானம் போலவும் இருக்கும் என்பதை முற்றும் அவர் அறிந்திருந்தார். இவ்வாறு இருந்தும் தாம் வழிபடும் கடவுளைக் குறை கூறாது, அவரை இமைப்பொழுதும் அவர் மறவாது ஆராதித்துவருவார். இவரன்றோ உத்தமர், இவரன்றோ இறைவருக்கு உகந்தவர்.

இவ்வாறு இருக்கும் நாட்களில், ஆண்டவர் அவருக்குத் தரிசனமாகி, "நீ உன் தேசத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ" என்று கட்டளை கொடுத்தார். அப்போது அவருக்கு வயது எழுபத்தைந்து. தம்முடைய அந்திய காலத்தில், சொந்த நாட்டையும் இனத்தவரையும் விட்டு எவ்வாறு பிரிவது என்று அவர் எண்ணவே யில்லை. மூர்க்கர் நிறைந்த புதிய நாட்டில் தமது இல்லாளோடு எவ்வாறு காலங் கழிப்பது என்று நினைக்கவுமில்லை. இறைவருடைய கட்டளை பிறந்ததும், அவர் முன்பின் யோசியாது அதை விட்டு நடந்தார், உத்தம குணம் நிறைந்த அவருடைய பத்தினியாரும் உடன் சென்றார். அப்போது அவ்வம்மையாருக்கு வயது அறுபத்து ஐந்து. அவ்வாறு வீட்டை விட்டு வெளியேறியதும் அவருக்கு துன்பம் ஒன்றன்பின் ஒன்ருய் வந்தன. எனினும், கடவுளை நம்பினோர்

கைவிடப்படார்' என்று எண்ணம் கொண்டிருந்த அப்பெரியார் அவைகளைப் பொருட்படுத்தவே யில்லை. முன்வைத்த காலைப் பின்வைக்கவு மில்லை.

ஆண்டுகள் பல கழிந்தன. அப்படிப்பட்ட நாட்களில், கடவுளை இடைவிடாது தொண்டுபுரியும் தேவதூதர் அப்பெரியாருக்குத் தரிசனமாகி. அவருக்கு ஓர் ஆண் மகவு தோன்றும் என வாக்களித்தனர். அப்போது அவருக்கு நூறு வயதெனவும், அன்னார் தேவியாருக்குத் தொண்ணூறு வயது எனவும் சுருதி கூறுகின்றது. இஃது அவருக்குப் பெரிதும் வியப்புக் கிடமாயது. அவர் தேவியார் அவ்வாக்கை முற்றும் நம்பாது சந்தேகித்தனர். இக்குற்றத்தை அறவே ஒழிக்குமாறு தூதர்கள், 'விருத்தர்களானு லென்ன? வயது நூறானுலென்ன கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்று உளதோ? நன்று, யாம் உரைத்த வண்ணம் ஓர் புத்திரன் உங்கட்குத் தோன்றுவான்' என விளம்பி அதை விட்டேகினர்.

இவ்வண்ணமாகவே இறைவர் வாக்குப்படி அவர்கட்கு ஓர் சுந்தரன் குறித்த தினத்தில் வந்துதோன்றினான். அவனே பெற்றோருடைய சிறந்த இலக்கணங்களை உருவாக அமையப் பெற்றவன். தாய்தந்தையருக்கு மிகவும் அடங்கி நடப்பவன். பெற்றோரைத் தெய்வமாகக் கருதும் இயல்புடையவன். இவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நன்னெறியிற் பயின்று சிறந்து விளங்கினான்.

இஃது இவ்வாறிருக்க, ஓர்நாள் இறைவர் அப்பெரியாரின் கீழ்ப்படிதலைப் பரிசோதிக்கக் கருதி, 'நீ உன் ஏகபுத்திரனை எனக்குப் பலிகொடு' என்று கட்டளை யிட்டனர். இம்மொழிகட்கும் அவர் பின் வாங்கவில்லை. மறுநாட்காலையில் அப்பெரியார் எழுந்து பலிக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு மைந்தனோடு குறிப்பிட்ட மலைக்குச்சென்றார். ஆ! என்ன கீழ்ப்படிதல்! என்ன பக்தி!

இறுதியாக, தந்தையாரும் தநயனும் குறிப்பிட்ட மோரியா மலை போய்ச் சேர்ந்தார்கள். அங்குச் சென்றதும் பலிப் பீட மொன்று இயற்றி, அதன்மீது விறகுகளை அடுக்கி அக்கினியும் வளர்த்தார்கள். அதன் பின் தொண்டர் தமது ஏக புதல்வனைப் பிடித்துக் கை கால்களைக் கட்டி அவனை வெட்டிப் பலியிடுதற் பொருட்டுக் கத்தியை எடுத்து ஓங்கினார். அப்போது வான மண்டலத்திலிருந்து, 'ஹே! உத்தமதாசா! சிறுவனுக்கு யாதொரு தீமையும் செய்யாதே.' நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராது எனக்குப் பலி கொடுக்குமாறு வந்தனையே! உனது கீழ்ப்படிதல் இன்று நன்கு புலப்பட்டது' என்றொரு சத்தங் கேட்டது. ஆபிரகாம் என்னும் அம்முனிவரே ஆண்டவருக்கு உகந்த பிள்ளை எனலாம். அன்னாருக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு கட்டளை களையும் அவர் செய்து முடித்தனரன்றோ! அவருடைய புதல்வனை ஈசாக்கும் தந்தையாருக்கு உகந்த பிள்ளை என்றுரைக்கலாமே. தன் உயிரையும் பெரிதென்று கருதாமல் பிதாவின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்கென்றே, மீறி ஓடாது, அடுக்கிய கட்டையில் அமைதியாகப் படுத்திருந்தான்.

இதன் முடிவு யாதெனச் சிறியோரே, நீர் அறிவீர். புதரிற் சிக்கிய ஆட்டுக்கடா ஒன்று அப்போது அப்பெரியாருக்குத் தென்பட்டது. உடனே அவர் அதைப் பிடித்து மகனுக்குப் பதிலாகப் பலியிட்டு மகிழ்ந்தார். தேவதூதர் மறு முறையும் அவருக்குக் காட்சி கொடுத்து, நீ உன் புத்திரன் என்று பாராமல் அவனை ஒப்புக்கொடுத்தபடியால், நான் உன்னை மிகுதியும் ஆசீர்வதிக்கின்றேன்! உன் சந்ததியை வான்மீன் போலவும் வாரி மணல் போலவும் பெருகப்பண்ணுவேன்! என வாக்களித்து அதைவிட்டு மறைந்தார். கடவுள் வாக்குப்படியே அவருடைய சந்ததி பல்கிற்று. அச்சந்ததியார் திரண்டு பல தேசங்களிலும் குடியிருக்கிறார்கள். அவர்களே யூதர் எனப் பெயர் பெறுவர்.

## 6. நட்பைப் பிரித்தலால் வருங்கேடு.

(அல்லது நட்பின் தன்மை)

படைப்புள்ள பொருளில் உயிர்கள் யாவும் நட்போடு கூடியிருத்தலே நன்று. கானகத்தே மாவினம் தத்தம் இனத்துடனும், அருங்கிளைகளுடனும் கூடியிருத்தல் சிறந்து தோன்றும். அவ்வாறே புள்ளினங்களும் தம்மினத்துடன் உறவாடியிருக்கும்போது அதன் சிறப்பு நன்கு புலனுகும். மேற்கூறப்பெற்றவைகள் தத்தமினங்களுடனும், இதர மரபுகளுடனும் நட்பாயிருத்தலால் எத்துணை நன்மை உண்டாகுமோ, அதற்குப் பன்மடங்கு நன்மை மன்பதைகள் தம்மினங்களுடனும் நண்பர்களுடனும் அருங்கிளைகளுடனும் நட்புக்கொள்வதால் உண்டாகும்.

மற்றவருடன் நட்பாகக் கூடியிருப்பவரும் நண்பருக்குள் இருக்கும் நட்பைக் காப்பவரும், நண்பர்களின் நட்பைக் கண்டு அதைப் பக்குவமாய்ப் பிரிப்பவரும் ஆகிய சில பகுதியார்கள் இவ்வுலகின்கண் இருப்பது உண்மை. மானிடர் எனப் பெயர் பெறும். இந்த ஒரு சாதிக்குள், இவ்வாருக மூன்று நான்கு குணமுடைய பகுதியாரைக் காண்கின்றோம். அந்தோ ! என்ன அதிசயம் ! மனிதர்கள் எல்லாருக்கும், ஒரே அறிவு, ஒரே உடல், ஒரே இரத்தம், ஒரே ஆவிதானே ! அவ்வாறிருக்க நற்குணம் ஒருவருக்கும், தீய குணம் ஒருவருக்கும் எவ்வாறு வந்து சேருகின்றது ?

“ சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்— நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம் ”

என்று முன்னோர் கூறியுள்ளபடி சித்திரம் எழுத எழுதக் கைப்பழக்கம் வரும். அருந்தமிழ்க் கல்வி படிக்கப்படிக்கவும், பேசப்பேசவும் வாக்கு வல்லமை உண்டாகும். ஆனால், நட்பு, தயை, கொடை முதலிய சிறந்த குணங்கள் ஒருவனுக்குப் பிறவியை யொட்டியே வருதல் வேண்டும். அன்றியும், குண முள்ள நண்பர்களை சார்ந்து அவர்கள் வாயிலாக இத்தகைய நற்குணங்களைக் கற்று சாதகத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும்.

ஆனது பற்றி, இயற்கையிலேயே எவனொருவனுக்கு அந்த நற்குணங்கள் இல்லையோ அவன் மேற்கூறியவாறு நல்ல தோழர்களை அடைந்து அன்னவர் மூலம் நற்குண மடைந்து இன்புறவேண்டுவதே கடனாகும். இதற்கு வழி வகை யாதெனில், '**நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்**' என்பதனாலே, நாம் கொள்ளப்புகும் நண்பர்களின் வாண்பு எத்தன்மை வாய்ந்தது என நன்கு பரிசோதிக்கவேண்டும். அதன்பின், **இணக்க மறிந் திணங்கு**' என்பதையும் '**சேரிட மறிந்துசேர்**' என்பதையும் கட்டளையாகக் கொள்ளவேண்டும். இவைகட்குப்பின் புதிதாகக் கொள்ளப்புகும் நண்பனின் நற்குணங்களை நன்குணர்ந்து நட்புக் கொள்ளல் வேண்டும். இவ்வாறு முன்பின் ஆராய்ச்சி செய்து நடக்கும்போது என்றும் வழிதவறமாட்டோம் என்பது திண்ணம். இவ்விதமிருக்க, மேற் கூறியவைகளை உணராது, புறம் நட்டு அகம் வேர்ப்பார் நட்பையும், சிங்கி குளிர்ந்தும் கொல்லக்கூடிய இயல்பினையுடைய போல, மனம், வாக்கு, காயம் என்கின்ற திரிகரணமும் வெவ்வேறு வழியாய் நிற்க, நயவஞ்சகமாய்ப் பேசுகின்ற மனத்தினருடைய நட்பையும் நட்பாகக் கொள்ளுவோமேயாகில்,

"சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு"

என்றவாறு, அந்த நட்பின் தன்மையானது சமயம் வந்த காலத்து துண்டு செய்வதற்குத் துணையாயுள்ள பட்டடையாகும் என்பதை நன்குணருகின்றவர்களாவோம். ஆகையினாலே, நல்லாரைக் கண்டு, நலமிக்க நல்லார் சொற் கேட்டு, நல்லார் குணங்களை யுரைத்து, அவரோடு இணங்கி இருத்தலையே முதன்மையாகக் கொள்வது நமது கடனாகும். அவ்வாறு அவ்வுத்தமர்களைத் தங்களுக்கு நண்பர்களாகக் கொள்ளுகின்றவர்கட்கு எத்தகைய இடையூறும் நேரிடாது என்பதை மறவா திருப்போமாக. அவ்விதம் ஏதேனும் அல்லல் நேரிடுங்கால் அவர்கள் தம்முயிரையும் ஈந்து தமது நண்பர்களைக் காப்பாற்றப் பின்னிடமாட்டார்கள் என்பதும் அறியத்தக்கது.

இஃதிவ்வாறிருக்க, கயவர் நட்பின் தன்மையானது சிங்கியைப் போலிருத்தலால், ஆன்றோர் சொற்படி தீயாரைக் காணவும், திருவற்ற தீயார் சொற்கேட்கவும், அவரோடு இணங்கியிருக்கவும் மனமொவ்வாது புத்தியோடு அவரைப் பிரிந்திருப்போமாக. துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாமலும், பொல்லாதவர்களுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் கூடும் இடங்களில் தங்கி இராமலும், கடவுளை இரவும் பகலும் சிந்தித்து வாழ்தல் என்ஞான்றும் நன்மை பயக்கும் என்பதையும் இறைவருடைய அருள்மாரியை நம்மீது பொழிவிக்கும் என்பதையும் மறவாதிருப்போமாக.

ஒப்பற்ற நண்பர் இருவரின் நட்பின் தன்மையை கீழ்க் கண்ட ஓர் உண்மைக்கதையினால் அறிந்து கொள்ளுவோமாக. பல்லாண்டுகளுக்கு முன், **லண்டன்** மாநகரில், இரண்டு நண்பர்கள் கலாசாலையிற் பயின்றுவந்தார்கள். அவர்கட்கு **நிக்காலஸ்** என்றும் **வேக்** என்றும் பெயர். அவர்கள் இருவரும் உடலும் உயிருமென வாழ்ந்துவந்தார்கள். இவ்வாறு

ஆண்டுகள் பல கழிய, அவர்களும் கலைகள் கற்றுக் கலாசாலை யையும் விட்டேகினர். அதன் பின்னர் நிக்காலஸ் நீதிமன்றத் தில் நியாயாதிபதியாகவும், வேக் வேந்தன் போர்க்களத்தில் வீரனாகவும் சேவை செய்துவந்தனர். இவ்விதமாகச் சில ஆண்டுகள் கழிந்துபோயின. நண்பர்களும் ஒருவரை ஒருவர் மறந்துபோயினர். அந்நாட்களில் போர்முனையிலிருந்த வேக் குற்றத்தினுற் கைது செய்யப்பட்டான். நீதிமன்றத்துத் தீர்ப்புப்படி இறுதியாக மரண தண்டனையும் அவன்மீது விழுந்தது. இவற்றை நண்பன் நிக்காலஸ் அறிந்து கொண்டான். நானூறு மைல் தூரமுள்ள இடத்தில் வேக்கைக் கண்ணுற்று அன்னனை இரட்சிக்கக் கருதி வாயுவேகம் மனோவேகமாகப் பரிமீதேறிச் சென்று நண்பனையும் இரட்சித்தான். விதிக்கப்பெற்ற தூக்குத் தண்டனையும் நிறுத்தப்பெற்றது. இவர்களன்றோ நண்பர்கள். இவர்கள் நட்பையல்லோ நட்பென்று கூறலாகும்.

ஆனல், எவன் கயவரோடு உறவாடி நட்புக்கொள்வானே அவன் பெரும் நெருப்பைக் கண்டு விலகியோடாது கண்துயிலும் மாசுணங்களை ஒப்பான். இதனை விளக்கக் கதை யொன்று கூறுவோம். தென்மேற்கு நாடுகளொன்றில், கோபாலன் எனப் பெயர் வாய்ந்த சிறுவனொருவன் இருந்தான். அவனுக்குக் **கோவிந்தன்** என்றொரு நண்பன் இருந்தான். அவ்விருவர்களும் வெகு ஒற்றுமையாக விருப்பதுபோல் மற்றவர்களுக்குத் தோன்றும். ஏனெனில், **'விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்,'** என்றவாறு, தப்பித் தவறி சிறுவர்கட்குள் ஏதேனும் சின மேற்பட்டால் அது உடனே மாறி அன்னர் இருவரும் உடனே உற்ற நண்பர்களாகிவிடுவர். இது இவ்விதமிருக்க, கோவிந்த னுடைய நடையுடை பாவனைகள் பெரியோர்கட்குச் சிறிதும் பிடிக்காதுபோயின. அவனுடன் நட்புக்கொள்ளாதிருக்க

கோபாலனையும் அப்பெரியோர் கண்டிப்பதுண்டு. கோபாலன் கோவிந்தனைப் போலி நண்பனென்று அறிந்து கொள்ளாது போயினன்.

'குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு' என்னும் பழமொழிப்படி, கோவிந்தன் கோபாலனைப்புறத்தே நட்டு, அகத்தே வேர்த்தான். கோபாலனுடைய இரக்கம், அன்பு, ஈகை, பிறரைக் காத்தல், அடக்கம், பொறுமை முதலிய சிறந்த குணங்களைக் கண்டு அவன் மேற் பொறாமைகொண்டான். இறுதியாக அவனோடு நெருங்கிப் பழகி அவனைக் கொன்று போடவும் வழி தேடிக்கொண்டிருந்தான். இவ்வாறிருக்க, ஓர் நாள் மாலை நேரம் இருவருமாகத் தத்தம் பரிகள் மீதேறிக்கொண்டு உலாவுமாறு வெளியேகினர். அவ்வண்ணமாகவே இருவருங்கூடி வெளியே செல்கின்றபோது தென்றல் மெல்லென வீசிற்று. பக்கங்களிலுள்ள மல்லிகை, முல்லை, செண்பகம், மருக்கொழுந்து முதலியவற்றின் நறுமணம் அவ்வெல்லைகளில் இனிது வீசிற்று. அச் சமயம்கோபாலன் யாதொரு கபடமுமின்றிக் கோவிந்தனோடு உரையாடிவந்தான். போலி நண்பனான கோவிந்தனோ புறத்தே நலமாக உரையாடிக்கொண்டு அகத்தே அவனைக் கொல்லுதற்குத் தகுந்த சமயம் தேடிக்கொண்டிருந்தான். அவர்களும் அப்படி யிப்படி யென்று தருக்களடர்ந்த கானகத்தினிடமாய்ச் சேர்ந்தார்கள். அங்கு பல்லாண்டுகளுக்குமுன் வாழ்ந்துவந்த ஓர் பெரியாருடைய குகையொன் றிருந்தது. அச்சமயம் கோவிந்தன் கோபாலனை விளித்து, 'அடே, மூடா! உனக்கு இன்று அழிவுகாலம் நெருங்கிற்று. உன் குலதெய்வத்தை நினைத்துக்கொள், என்று சொல்லிக்கொண்டே அன்னனைத் தன் கைவாளால் வெட்டிப் பெரு நிலத்தில் வீழ்த்தினான். அந்தோ! என்ன பரிதாபம்! கூடாத பேரோடு கூடுவதால் நேரும் அல்லல்களைக் கவனித்தீர்களா ?

இன்னும் நண்பர்களிருவருக்குள் இருக்கும் நட்டைக் கண்டு அதனைப் பக்குவமாய்ப் பிரிக்கின்ற குணமுடை யோரையும் நாம் அடிக்கடி காண்போம். 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம், என்னும் பழமொழிப்படியும், என் கண் ஒன்று கெட்டாலும் கெட்டும் அடுத்தவன் கண்கள் இரண்டும், பாழாகட்டும்' என்றபடியும் அடுத்தவர்களைக் கெடுக்கவும், நட்பைப்பிரிக்கவும் அவர்கள் தத்தம் காலங்களைச் செலவுசெய்து நிற்பர். அத்தகையோர் களையும் நாம் ஓர் கணமும் நம்பலாகாது. அவர்களுடன் உறவு கொள்ளவுங் கூடாது. 'தான் வெட்டின குழியில் தானே விழுவான்' என்பதுபோல அத்தீயார் தத்தம் தலைகளில் தாங்களே புழுதியை வாரிப்போட்டுக்கொண்டு உயிர் துறப்பர். இதனை விளக்க நம் முன்னோர் ஓர் கதை சொல்லுவார்கள். அது பின் வருவது :—

தென்கன்னடத்தில், முன்னொரு காலத்தில் கோடீசுவரன் ஒருவர் மனையாள் மகவுகளுடன் வாழ்ந்து வந்தார். குபே ரனையொத்த இந்தக் குமரப்ப முதலியாருக்கு எத்தகைய வருமான முண்டோ அத்தகைய வருமானமே மோகனாங்கி யென்ற ஓர் மாதுக்கும் இருந்தது. முதலியாருக்கு இடம், பொருள், ஏவல் என்னும் மூன்றிலும் எவ்விதச் சிறப்புக்கள் இருந்தனவோ' அவ்விதச் சிறப்பே மோகனாங்கிக்கும் மேற் கூறியவைகளில் உண்டாயிருந்தது. முதலியாரும் மோகனாங் கியும் வெவ்வேறு கிராமங்ளில் இருந்தபோதிலும் அவர்களு டைய நட்பு வெகு சமீபத்திலிருந்தது. அவ்விருவர்களுடைய நட்பு, பிறர்மீது கொள்ளும் அனுதாபமும், இரக்கமும், பரோ பகாரமும், கடவுள் வழிபாடும் ஆகிய இவைகள் சிறந்து இலங் கின. இதனால் அவர் இல்லங்கள் இறைவர் முன் நலமாகத் தோன்றின.

இது இவ்வாறு இருக்க, ஓர் துஷ்டன் அவர்களிடம் சென்று அவர்களுடைய நட்பைப் பிரித்து இருகுடும்பத்திலும் பகையை மூட்டுவித்து அக்கிராமங்களேயே பழாக்கிவிட நிச்சயஞ் செய்தான். ஆனதுபற்றி அந்தக் குணவீரன் ஓர்நாள் முதலியாரிடஞ் சென்று, ஐய! உங்கட்கு உண்டாயிருக்கும் தனத்தைக் கண்டும், உங்களுடைய சிறந்த இலட்சணங்களேப் பார்த்தும், மோகனுங்கி மிகுந்த பொருமை கொண்டுள்ளாள். வெளிவேஷம்போல் உங்களிடம் அவள் உறவாடுகின்ருளே ஒழிய, உட்புரத்தில் அவள் நவயஞ்சகி, மதிமோசஞ் செய்யும் பாதகி, உங்களுடைய வாழ்வை விரும்பாத பெரும் பாவி. அவளுடைய நட்பும் ஓர் நட்பாகுமோ! என்று பலவாருகக் கூறி விட்டு போயினன்.

குணவீரன் உரைத்தவைகளேக் கேட்ட முதலியார், 'இவையாவும் உண்மைதானே' என்ன, குணவீரன் மறுமுறையும் அவரை நோக்கி 'ஐய! இவைகள் யாவும் மெய்யே!' என்று சாற்றினன். 'பொய்யுடைய ஒருவன் சொல் வன்மையினல் மெய்போலுமே' என்பது இங்குப் பலிதமாயிற்று. முதலியார் இக்கூற்றுக்களேக் கூறிய குணவீரனுக்குப் பட்டாடைகளும் வேறு தக்க வெகுமதிகளுங் கொடுத்து அனுப்பினர். அதன்பின்பு, முதலியார் தமக்கு உரைக்கப் பெற்றவைகள் உண்மையோ அன்ருே என அறியாது அந்நாள் முதல் மோகனுங்கியின்மீது நட்புக்கொள்ளாது விரோதியாயினர்.

முதலியாரிடம் சன்மானங்கள் பெற்ற குணவீரன் அதனுடன் சும்மா விடாமல், மோகனுங்கி யிடஞ்சென்று அம்மா! என்தாயே! தங்களுடைய கல்வி, பொருள், பரோபகாரம், இரக்கம், ஈகை, கடவுள் வழிபாடு,முதலிய நற்குணங்களேக் கண்டு குமரப்ப முதலியார் பொருமை கொண்டுவருகின்ருர். தங்களுடைய செல்வத்தை யழித்துவிடுவதற்கான

சூழ்ச்சிகளையும் செய்து வருகிறார். இனிச் சற்று விழிப்பாகவே இருங்கள். அவருடைய நட்பும் உங்களுக்கு வேண்டாம். என்பதாகக் கூறினன்.

'பெண்புத்திபின்புத்தி' என்பது ஓர் பழமொழி. எனினும், இத்தகைய காரியத்தில் ஓர் ஆண்மகனே ஏமாறும்போது கேவலம் ஓர் பெண்ணைப்பற்றி நாம் சொல்லக்கூடியதென்ன? மோகனங்கி குணவீரனைத் தன் அகத்தே யழைத்தாள். ஓராயிரம் ரூபாயு மீந்தாள். அதன் பின் அவள் அவனை நோக்கி, 'என் பிராணதாதா! என் உயிருக்கு நீரே தஞ்சம். முதலியாருடைய சிந்தனைகளை அவ்வப்போது அறிந்து சொல்லும்' என்று கேட்டுக்கொண்டாள்.

முன்பின் கவனியாது மூன்றும் மனிதனை நம்பினவர்களின் நிலைமையைக் கவனித்தீர்களா? மூன்றும் மனிதனை நம்பியதால், முதலியாருக்கும் மோகனங்கிக்கும் இருந்த நீண்டகால நட்பு மாறிற்று. இருதிறத்தாருக்கும் பொருட் செலவும் ஆயிற்று. அவ்விருவருக்குள்ளும் விரோதம் அதிகரித்ததுதான் கண்ட பலன். ஆகையினல் நாம் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கு முன்பே

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு"

என்றபடி, ஆரம்பத்திலேயே தீரப் பரிசோதித்துக் கருமத்தை முடித்தலே நலமாகும். குணவீரன் புரிந்த கருமமே மித்திரபேதம் எனப்படும். நன்பர்களுக்குள் இருக்கும் நட்பைப் பிரித்தலே மித்திரபேதம்.

ஆனல் இவ்வித துரோகஞ் செய்த குணவீரனுடைய கதி யாதாயிற்று என நோக்குங்கால் அவன் அப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குச் செல்லும் பொழுது கள்வர்

வந்து அவனை அடித்துப் பறித்தது மன்றி அவனைக் கானகத்தே சுட்டெரித்தும் போட்டார்கள் எனவும் நன்கறிவோம்.

"நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி"

என்றபடி குணவீரனுடைய கதியும் ஆயிற்று. ஆனதாலே நாம் நமது தாய் தந்தையர்களிடத்திலும், ஆசான் குருக்களிடத்திலும் நண்பர்களிடத்திலும், உடன் பிறந்தார்களிடத்திலும் நட்பாயிருப்பதுடன் நட்பைப் பிரிக்கும் குணத்தையும் நம்மைவிட்டு எடுத்துவிடுவோமாக.

"நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு."
"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு."

நல்லநூற்பொருளை கற்குந்தோறும் அது கற்பவருக்கு எங்ஙனம் இன்பம் தருகின்றதோ அங்ஙனமே நற்குணமுடைய மக்களோடு நாம் நட்புச் செய்யச் செய்ய இன்பம் உண்டாகும். கண்ட விடத்து முகமாத்திரமே மலரும்படி சிநேகிக்கிற சிநேகம் சிநேகம் ஆகாது. ஆனால் அன்பு பொங்கி உள்ளமும் மலரும்படி சிநேகிப்பதே நல்ல சிநேகம் ஆகும்.

முற்றிற்று.

PRINTED AT
THE LAWLEY ELECTRIC PRINTING PRESS,
K. M. HALL, TANJORE.

1-A
8-189

*Copies can be had from:-*

The Author, G. GEORGE THANGASAMI,

**K. M. Hall, Tanjore.**

| | | Rs. A. P. |
|---|---|---|
| 1. | **PANDYA** (Approved by the Text-Book Committee, Madras.) | |
| | **III Edition** - - | 0—10—0 |
| 2. | **BHODANA MANJARY ( Part I )** (Approved by the Text-Book Committee, Madras.) | 0— 5—0 |
| 3. | **BHODANA MANJARY ( Part II )** | 0— 5—0 |

**Suitable texts for non-detailed studies.**